இனி அது ரகசியம் அல்ல!
தென்னிலங்கையில் பெரும் அரசியல் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் ரஞ்சன் ராமநாயக்கா எம்.பியின் தொலைபேசி உரையாடல் பதிவு விவகாரம் நாளொரு திருப்பமும் பொழுதொரு அதிரடித் தகவலுமாகத் தொடர்ந்து பொறி பறக்கும் பக்கம் 02

பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 26 சனிக்கிழமை 11.01.2020 கதிர் 67

# தேர்தலின் பின்பே தீர்வு முயற்சி; அதுவும் சிங்களவர் விருப்பப்படி!

## சம்பந்தனுக்கு மஹிந்தர் பதில்



கொழும்பு, ஜனவரி 11

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அரசியல் தீர்வுக்கான எமது பணிகள் ஆரம்பமாகும். அந்தத் தீர்வு சிங்கள மக்கள் விரும்புகின்ற தீர்வாகத் தான் இருக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு பதில் கொடுத்துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. பக்கம் 03

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

மட்டக்களப்பு, ஜன. 11

மட்டக்களப்பில், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிரான் பிரதேசத்தில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கை ஒன்றின் பக்கம் 03

## கட்சிக் கொள்கையை மீறிய தர்சானந்த் மீது நடவடிக்கை



புளொட் அமைப்பு அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 11

கட்சியின் அடிப்படைக் கொள்கைகளை மீறிச் செயற்பட்ட யாழ். மாநகர சபை உறுப்பினர் ப.தர்சானந்த் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தமிழ்த் பக்கம் 03

## வடக்கு ஆளுநருடன் மாவை எம்.பி. சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன.11

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸை தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளு பக்கம் 03

## வெளிநாட்டில் இருந்து வந்தவர் உட்பட மூவர் விளக்கமறியலில்!

வாள்வெட்டுக் குற்றச்சாட்டில்

யாழ்ப்பாணம், ஜன. 11

தென்மராட்சி – கொடிகாமம், மந்துவில் இயற்றாலை, காரைக்காட்டுப் பகுதியில் காணித் தகராறு காரணமாக இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று நபர்களை பக்கம் 03

## வவுனியாவில் இராணுவம் ரோந்து



வவுனியா, ஜன. 11

வவுனியா நகர் பகுதி மற்றும் சுற்றுு வீதிகளில் நேற்றுக் காலை தொடக்கம், இராணுவத்தினர் திடீர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர். பக்கம் 03

## இ.போ.ச. யாழ். ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கை



யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி – முழங்காவில் ஊடாக கொழும்புக்கான பஸ் சேவையை வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணம் பக்கம் 03

## மன்னிப்புக் கோருகிறார் சட்டத்தரணி ரெமீடியஸ்

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ்.மாநகர சபையில் குழப்பமான நிலை உருவாக்கப்பட்டு, தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டமைக்காக நான் பகிரங்கமான மன்னிப்பு பக்கம் 03

## துமிந்தவை விடுவிக்கக் கேட்டோரை விரட்டிக் கலைத்தாராம் கோட்டாபய!

கொழும்பு, ஜன. 11

மரண தண்டனைக் கைதியான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை, விசேட பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடுமையாகத் பக்கம் 03

## கட்டுநாயக்கவில் தீவிர சோதனை!



கொழும்பு, ஜன. 11

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வரும் பயணிகள் விசேட சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. பக்கம் 03

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றும் உறுதிமொழியை உடன் நிறைவேற்றுங்கள்

மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தல்

கொழும்பு, ஜன. 11

இலங்கை அரசு, அதன் சர்வதேச மனித உரிமைக் கடமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றுவது என்று முன்னர் வழங்கியிருக்கும் உறுதிப்பாட்டை நிறைவேற்றும் வகையில் பின்பற்ற வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றாக முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ பக்கம் 03

# மொரகாகந்த பிரதான அணையில் ஏற்பட்ட நீர்க் கசிவு குறித்து ஆய்வு

மொரகாகந்த நீர்த்தேக்கத்தின் பிரதான அணையில் ஏற்பட்ட நீர் கசிவு தொடர்பாக ஆய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பின் புவியியல் நிறுவனத்தின் பணிப்பாளர் ஆர்.எம்.எஸ் பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.

நீர்க் கசிவு ஏற்பட்ட நிலத்தின் தன்மையையும், கசிவின் ஆழம், நீர் கசிந்த திசை என்பவற்றை உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆராய்ச்சிக்கு உட்படுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பரிசோதனை அறிக்கையானது இலங்கை மகாவலி அதிகாரசபையிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

# மத்ரஸாக்களில் போதனைகள்; ஆய்வு செய்யப் பிரதமர் பணிப்பு

கொழும்பு,ஜன.11

இலங்கையிலுள்ள சகல அரபு மத்ரஸாக்களையும் முஸ்லிம் சமய விவகார திணைக்களத்தின் கீழ் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அந்த அரபு மத்ரஸாக்களில் போதிக்கும் விடயதானங்கள் தொடர்பிலும் ஆய்வுக்குட்படுத்துமாறு பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இவ்வாறு ஆய்வுக்குட்படுத்தியதன் பின்னர், முஸ்லிம் விவகார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு என்பவற்றுடன் இணைந்து சரியான பரிந்துரைகளை தயார் செய்யுமாறும் பிரதமர் அறிவுரை வழங்கியுள்ளார்.

பௌத்த மத விவகாரம் மற்றும் கலாசார அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் என்பவற்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் பிரதமர் இதனைக் கூறியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (மு)

# அரசியல் பழி வாங்கல்கள்; விசாரிக்க ஆணைக்குழு!

கொழும்பு,ஜன.11

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் நிதிக்குற்றப் புலனாய்வு பிரிவு மற்றும் இலஞ்சஊழல் ஆணைக்குழுவின் ஊடாக இடம்பெற்றவை எனஜ் கூறப்படும் அரசியல் பழிவாங்கல்கள் குறித்து ஆராய ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் 3 பேர் கொண்ட ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

அடுத்த அறு மாதங்களில் இந்த ஆணைக்குழு தனது அறிக்கையை கையளிக்கும்.

# ஈ-சிற்றி விருது வழங்கும் விழா நாளை சரஸ்வதி மண்டபத்தில்

யாழ்ப்பாணம்,ஜன.11

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் இயங்கிவரும் ஈ-சிற்றி ஆங்கிலக்கல்லூரியில் ஆங்கில, சிங்களக் கணனிப் பாடநெறிகளைப் பூர்த்தி செய்தோருக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் கல்லூரியின் அதிபர் தேசகீர்த்தி லயன்.ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தலைமையில் யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் (சேர் பொன் இராமநாதன் வீதி, ராஜா கிறீம் ஹவுஸ் மண்டபத்தில்) நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமான சுமந்திரனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வித் துறைத் தலைவர் கலாநிதி திருமதி இராசநாயகமும், கௌரவ விருந்தினராக முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தனும் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்வில் ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# ஈரான் தூதுவருடன் பேசினார் மைத்திரி

கொழும்பு, ஜன. 11

இலங்கைக்கான ஈரான் தூதுவர் மொஹமட் சயரி அமீரானியுக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கைக்கான ஈரான் தூதுவர் சயரி அமீரானி, தனது பதவிக்காலத்தை நிறைவு செய்து, மீண்டும் நாடு திரும்பவுள்ள நிலையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தனது பதவிக்காலத்தில் வழங்கிய ஒத்துழைப்புக்களுக்கு ஈரான் தூதுவர் மொஹமட் சயரி அமீரானி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நன்றி தெரிவித்தார்.

அத்துடன், ஈரான் தூதுவர் என்ற வகையில் இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்புக்களுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தமது நன்றியைத் தெரிவித்துள்ளார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திகளாக வலம் வந்து கொண்டிருக்கின் றன.

அவரது உரையாடல் பதிவுகளை வைத்து முன்னைய நல்லாட்சி அரசை ஒரு பிடிபிடிக்கலாம் என்று கருதி, அந்த உரையாடல் பதிவுகளை ஒவ்வொன்றாக அவிழ்த்து விட்டவர்கள் இப்போது திருடனுக்குத் தேள் கொட்டிய மாதிரிப் பம்மிக் கொண்டு அடங்கி நிற்க வேண்டிய கட்டத்துக்கு வந்திருக்கின்றார்கள் என்று தகவல்.

தற்போதைய புதிய அரசில் கொடிகட்டிப் பறக்கும் சில பிரமுகர்களின் மனைவிமாரும், பிரமுகர்களும் ரஞ்சன் ராமநாயக்காவுடன் தொலைபேசியில் உரையாடிய விடயங்களில் கெஞ்சல்கள், கொஞ்சல்களில் இருந்து பல 'டீல்'கள் வரை அடங்கியிருக்கின்றன என்று கேள்வி. அவை வெளிவந்தால் தற்போதைய ஆளும் தரப்பிலும் பலரின் நிலைமை கந்தல்தான் என்கின்ற சில விடயமறிந்த வட்டாரங்கள். அதனால் இந்தத் தரப்புகள் எல்லாம் அதிகாரத் தரப்பாரின் கால்களில் போய் விழுந்து, இந்தப் பதிவுகள் வெளியாகும் தொடரை எப்படியாவது தடுத்து நிறுத்துமாறு கோரியிருக்கின்றன.

அதனால், மேலிடத்து உத்தரவு – அழுத்தம் – ஆகியவை காரணமாக ரஞ்சனின் குரல் பதிவைத் தொடராக சமூக ஊடகங்களில் கசிய விடும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கிறதாம்.

ஆனாலும், அப்படி ஒலிப் பதிவுகள் வெளியாகாமல் இடைநிறுத்தப்படுவதற்கு உறுதி கூற முடியாது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

ரஞ்சன் ராமநாயக்கா பக்கத்திலிருந்து அந்தப் பதிவுகளின் பிரதிகளை சுட்டுக் கொண்ட தரப்பு ஒன்றே அவற்றைப் பகுதி பகுதியாக 'லீக்' செய்து வந்தது. அதிகாரத் தரப்பின் அழுத்தத்தால் அந்தத் தரப்பு இப்போதைக்கு மிஞ்சிய பதிவுகளை கசிய விடுவதை இடைநிறுத்தச் சம்மதிக்காலம்.

எனினும் இந்தப் பதிவுகளின் மூலப் பிரதி இன்னும் ரஞ்சனிடம் இருப்பதாகக் கூறப்படுகின்றது. ஆளும் தரப்பின் பிரமுகர்கள் மற்றும் அவர்களின் மனைவிமார் சம்பந்தப்பட்ட உரையாடல்களை ரஞ்சன் ராமநாயக்கா தரப்பே சத்தம் சந்தடியின்றி இனிமேல் கசிய விட்டுவிட்டு, முன்னைய தரப்பே அதைக் கசிய விட்டமாதிரி பாசாங்கு பண்ண முடியும் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

*"இந்த விவகாரங்கள் குறித்து நடிகரும் எம்.பியுமான ரஞ்சன் ராமநாயக்கா என்ன சொல்லுகின்றார்? தமது இரகசிய உரையாடல்கள் பற்றிய பதிவு பகிரங்கமாக – அம்பலமாக – வெளிப்படுத்தப்பட்டமை தொடர்பில் அவர் கூனிக் குறுகி, முடங்கிப் போய் இருக்கின்றாரா?"* – என்று தென்னிலங்கைப் பத்திரிகையாளர் ஒருவரிடம் கேட்டேன்.

அவர் கடகடவெனச் சிரித்தார்.

*"அவரா...! அவர் ஏன் அப்படி நடக்கின்றார்? அது உப்புப் போட்டுச் சாப்பிடும் – வெட்கம், ரோசம், மானம் உள்ளவர்களுக்குத்தான் – அப்படிக் கூனிக் குறுகும் போக்கு வரும். அவமானம், அபகீர்த்தி எல்லாம் அத்தகையோர்தான் உணர்வர். இவர் அப்படிக் கருதவில்லை. தமது இரகசிய தொலைபேசி உரையாடல்களின் பதிவுகள் அம்பலமானவை தமக்குப் பெருமை – சிறப்பு – தகுதி – என்று எண்ணிக் கொண்டிருக்கின்றார் அவர். விக்கிலீக்ஸ் ஊடாக அமெரிக்க புலனாய்வு இரகசியங்களை அம்பலப்படுத்தித் தம்மைப் பெருமைக்குரியவராக ஆக்கிக் கொண்ட ஜீலியன் அஸஞ்சே போல தாமும் ஒரு பெரிய வீரன் என்ற நினைப்பு அவருக்கு"* – என்றார் என் ஊடக நண்பர்.

*"நான் ஏன் வெட்கப்பட வேண்டும்? என்னிடம் மூடி மறைக்க எந்த இரகசியமோ சுத்துமாத்தோ இல்லை. நான் கையூட்டுப் பெற்று, குறுக்கு வழியில் சம்பாதிக்க முயன்றவனும் அல்லன். பல பேரின் உண்மை முகங்களை, அவர்களின் முகத்திரைகளைக் கிழித்து அம்பலப்படுத்தியிருக்கின்றேன்"* – என்று தன்னைத் தானே புகழ்ந்து கொண்டாரம் ரஞ்சன் ராமநாயக்கா.

அவருடன் தொலைபேசியில் உரையாடிய இரண்டு பிரமுகர்கள், இது குறித்து அலட்டிக் கொள்ளாமல் இருக்கின்றனர்.

ஒருவர் – பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. *"நான் அவருக்குப் பிறந்தநாள் வாழ்த்துத்தான் கூறினேன். எனவே அது குறித்து அலட்டிக் கொள்ள ஒன்றுமில்லை"* என்கிறார் மஹிந்தர்.

அடுத்தவர் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் எம்.பி.. நீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சித்தமை மூலம் நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்று ரஞ்சன் ராமநாயக்காவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் நடந்து வருகின்றது. அந்த வழக்கில் ரஞ்சன் ராமநாயக்காவுக்காகப் பிரசன்னமாகி வாதிடுபவர் சுமந்திரன்தான். இந்த வழக்குத் தொடர்பாக பல தடவைகள் ரஞ்சன் ராமநாயக்காவுடன் தொலைபேசியில் உரையாடியிருக்கின்றார் சுமந்திரன்.

"ஆம். நான் பல தடவைகள் அவருடன் தொலைபேசியில் உரையாடியிருக்கின்றேன். அவை வழக்கு சம்பந்தமான உரையாடல்கள்தான். அதில் பிரச்சினை ஒன்றும் இல்லை" – என்றார் சுமந்திரன்.

ஆனால், வழக்கில் சட்டரீதியான பாதுகாப்பை எட்டுவதற்கு சுமந்திரன் கையாண்டிருக்கக் கூடிய சட்ட தந்திரோபாயங்கள், விவகாரங்கள் பற்றிய விடயங்கள், சட்ட நுட்ப உத்திகள் போன்றவை இந்த உரையாடல்களில் பரிமாறப்பட்டிருக்கக் கூடும். அவை அம்பலமாவது தவிர்க்கப்பட முடியாததாக இருக்கும்.

★ ★ ★

1977 முதல் கடந்த 3 ஆம் திகதி வரை நாடாளுமன்றத்தில் பிரதி அமைச்சர், அமைச்சர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் என்ற அந்தஸ்தில் இருந்து வந்த ரணில் விக்கிரமசிங்க இப்போது சாதாரண எம்.பி.

இது குறித்து இப்பத்தியில் ஏற்கனவே விலாவாரியாக விவரித்திருக்கின்றேன்.

சாதாரண எம்.பி என்பதால் நாடாளுமன்றத்தில் தனியான அலுவலக அறை கூட அவருக்குக் கிடையாது. தன்னிடம் வரும் விருந்தினர்கள், மற்றைய எம்.பிக்களை இருத்திப் பேசுவதற்கும் பிரத்தியேக இடமில்லை.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகம் கூட சஜித் பிரேமதாஸ வசமாயிற்று.

தமக்கு ஓர் அறை ஒதுக்கித் தருமாறு ரணில் முதலில் சபாநாயகர் கரு ஜயசூரியவைத் தொடர்பு கொண்டு கோட்டாராம். ஆனால் சபாநாயகர் கையை விரித்து விட்டார். அப்படி ஒரு தனி எம்.பிக்கு நாடாளுமன்றத்தில் அலுவலக அறை தருவதற்கு தமக்கு அதிகாரமில்லை என்றார் அவர். தருவதற்குத் தமக்கு அதிகாரமில்லை என்றால் அவர் பிரதமருடன் தொடர்பு கொண்டு பேசுங்கள் என்று ஆலோசனை கூறினார் சபாநாயகர்.

அதன்படி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசினார் ரணில்.

முன்னர் பல டசின் அமைச்சர்கள் இருந்த இடத்தில் இப்போது 15 அமைச்சர்கள்தான். அதனால் அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட பல அறைகள் வெறுமனே பூட்டிக்கிடக்கின்றன.

"முன்னாள் பிரதமருக்கான அலுவலகம் என்ற கோதாவில் மேற்படி பூட்டிக் கிடக்கும் அலுவலகப் பகுதி ஒன்றை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கும்படி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் கரு ஜயசூரியவுக்குப் பரிந்துரைத்திருக்கின்றார்.

அதையடுத்து முன்னர் அமைச்சர் வஜிரா அபே வர்த்தன பயன்படுத்திய நாடாளுமன்ற அலுவலக அறை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்படுகின்றது.

அது மாத்திரமல்லாமல், கொழும்பு நகரில் இதுவரை பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகையில் தங்கியிருந்த ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவி பறிபோனதும் கொழும்பு-7 இல் உள்ள தனது சொந்த இல்லத்தில்தான் தங்கியுள்ளார். அங்கு விலாசமான அலுவலகம் ஒன்றை நடத்த அவருக்கு வசதியில்லை.

ஸ்ரீகொத்தாவிலிருக்கும் ஐ.தே.கட்சித் தலைவரின் அலுவலகமும் அவரின் கைகளில் இருந்து எந்நேரமும் பறிபோகும் சூழ்நிலை.

அதனால் ரணில் குறித்து விசேட கவனம் – கருணை – காட்டியிருக்கின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ என்று தெரியவருகின்றது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வசதிகள், சிறப்புரிமைகள், பாதுகாவல்கள் வழங்கப்படுவது போல, முன்னாள் பிரதமர் என்ற முறையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கொழும்பில் உத்தியோகபூர்வ இல்லம், அலுவலகம், ஆளணி, பாதுகாவலர்கள், வாகன வசதி என்பவற்றை அளிக்க வேண்டும் என சிபாரிசு செய்யும் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை அமைச்சரவையில் சமர்ப்பிக்கின்றார் மஹிந்தர். எதிர்க்கட்சி தலைவர் பதவி, கட்சித் தலைவர் பதவி போன்றவற்றை ரணில் இழந்தால் கூட அவரது நீண்ட கால அரசியல், தலைமைத்துவம் போன்றவற்றுக்கு நாடு மதிப்பளிக்கும் விதத்தில் உரிய கௌரவம் வழங்கப்படும் என்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

அரசியலில் எதிரிகளாக இருந்த போதும் மஹிந்தவுக்கும் ரணிலுக்கும் இடையில் எப்போதுமே நல்ல Chemistry இருக்கின்றது என்று கூறுவார்களே...! அதுதானா இது?

–மின்னல்–

## கட்சிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக்கூட்டமைப்பின்பங்காளிக் கட்சிகளில் ஒன்றான புளொட் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளவை வருமாறு: –

கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒற்றான புளொட் அமைப்பைப் பிரதிநிதித்துவப் படுத்தி யாழ். மாநகர சபை உறுப்பினராக உள்ள தர்சானந் சபை அமர்வின்போது எமது கட்சியின் கோட்பாடுகள், கொள்ளைகளை மீறிச் செயற்பட்டிருக்கின்றார்.

ஆகையால் அவருடைய அறிக்கைகள், பேச்சுக்கள் மற்றும் செயற்பாடுகள் சம்பந்தமாக விளக்கம் கோரப்பட்டுள்ளது. அவரது செயற்பாடுகள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சிக் கொள்ளைகள், கோட்பாடுகளைமீறுகின்றவகையிலான இத்தகைய செயற்பாடுகளையும் சொல்லாடல்களையும் ஒருபோதும் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அதனை வன்மையாகக் கண்டிப்பதுடன் உடனடியாக இவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சபையில் யாரேனும் எப்படியான ஆத்திரமூட்டும் சொல்லாடல்களைப் பாவித்திருந்தாலும் அதற்கு எதிராக எங்கள் கட்சிக் கொள்கைகளை மீறுகின்ற வகையில் செயற்படுவது அநாகரீகமானது என்பதுடன் எங்கள் அடிப்படைக் கொள்கைகளில் இருந்து முரண்பட்ட விடயமாகவே இதனைப் பார்க்கிறோம்.

ஆகவே, இவை தொடர்பில் விளக்கம் கோரப்பட்டிருப்பதுடன் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கையையும் எடுக்க இருக்கின்றோம். மேலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆகவே எந்தச் சந்தர்ப்பத்திலும் கட்சிக் கோட்பாடுகளை மீறுகின்றவகையில்கட்சிக்கொள்கைகளுக்கு முரணான சொல்லாடல்களைப் பாவிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. எங்கள் கட்சியில் இருக்கின்ற எவருமே அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட முடியாது. ஆகையினால் தான் இவர் மீது கட்சி நடவடிக்கை எடுக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம் – என்றார். (ஐ-07)

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையிலான அமைச்சரவை கடந்த வாரம் வாபஸ் பெறுவதாக அறிவித்திருந்தது.

இந்நிலையில் இந்த விடயம் குறித்து அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பிராந்தியப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், புதிதாகநியமனம்பெற்றுள்ளஏனைய அதிகாரிகளும் அண்மைக்காலமாக மனித உரிமைகள் சார்ந்த விவகாரங்களில் பெற்ற நன்மைகளை விரைந்து சீர்குலைக்கின்றனர் என சாடியிருக்கிறார்.

## இ.போ.ச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலை முகாமைத்துவம் இடைநிறுத்தியமைக்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை எதிர்வரும் நாள்களில் தொடரும் நிலை ஏற்படும் என்று வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தொழிற்சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து இரவு 8 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி – முழங்காவில் ஊடாக கொழும்புக்கான பஸ் சேவையை யாழ்ப்பாணம் சாலை பஸ் முன்னெடுத்தது. அதேநேரத்தில் கிளிநொச்சி சாலை பஸ் கொழும்புக்கான சேவையை கிளிநொச்சி ஊடாக முன்னெடுத்தது.

இந்த பஸ் சேவைகள் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி சாலைகளின் நிர்வாகத்தின் இணக்கத்துடன் இடம்பெற்றுவந்தன.

இந்த நிலையில் நேற்று முன்தினத்திலிருந்து யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி – முழங்காவில் ஊடாக கொழும்புக்கான பஸ் சேவையை யாழ்ப்பாணம் சாலை முகாமைத்துவம் முன்னறிவித்தலின்றி இடைநிறுத்தியது.

அத்துடன், யாழ்ப்பாணம் சாலை நடத்திய பஸ் சேவையையும் சேர்த்து கிளிநொச்சி சாலை இரண்டு பஸ் சேவைகளை முன்னெடுக்கின்றது.

யாழ்ப்பாணம் சாலை முகாமைத்துவத்தின் இந்த நடவடிக்கையால் யாழ்ப்பாணம் சாலையில் பணியாற்றும் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவித்தே இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையை ஊழியர்கள் முன்னெடுத்துள்ளனர். (ஐ-07)

## கட்டுநாயக்கவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீனாவில் இருந்து நோய் அறிகுறிகளுடன் நாட்டை வந்தடையும் பிரஜைகள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விசேட சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர் எனத்தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

சீனாவில் பரவி வரும் இனந்தெரியாத நிமோனியா காய்ச்சல் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தொற்று நோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நிமோனியா காய்ச்சல் பரவுவது தொடர்பில் அண்மையில் உலக சுகாதார மையம் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேர்தலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரப் பகிர்வு குறித்து சிந்தித்தால் மட்டுமே அபிவிருத்தி சாத்தியமாகும். தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு அரசு செவிமடுக்க வேண்டும். அப்போது தான் சர்வதேச முதலீடுகள், அபிவிருத்திகள் என அனைத்தையும்பெற்றுக்கொள்ள முடியும் – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கருத்துத் தெரிவிக்கையில் –

அதிகாரப் பகிர்வு குறித்து சிந்தித்தால் மட்டுமே அபிவிருத்தி சாத்தியமாகும் என்று இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தப்புக் கணக்குப் போடக்கூடாது. போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு அபிவிருத்தி தான் மிகவும் அவசியம்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அரசியல் தீர்வுக்கான எமது பணிகள் ஆரம்பமாகும். மூவின மக்களுக்கும் சம உரிமையுடனான தீர்வை நாம் பெற்றுக் கொடுப்போம். அந்தத் தீர்வு சிங்கள மக்கள் விரும்புகின்ற தீர்வாக இருக்கும்.

ஏனெனில் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கி – ரணில் தலைமையில் தலைவிரித்தாடிய ஊழல், மோசடி ஆட்சியை மாற்றியமைத்ததில் சிங்கள மக்களுக்குப் பெரும் பங்குண்டு.

அதற்காக தமிழ், முஸ்லிம் மக்களை நாம் புறக்கணிக்க மாட்டோம். அவர்களையும் அரவணைத்துக் கொண்டு சிங்கள மக்கள் விரும்புகின்ற அரசியல் தீர்வை நாம் பெற்றுக்கொடுப்போம் – என குறிப்பிட்டுள்ளார்.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முற்பகல் 11 மணியிலிருந்து இராணுவத்தினர் வவுனியா நகர்ப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர். திடீரென வவுனியா குளக்கட்டு வீதியூடாக பூந்தோட்டத்தை நோக்கிச் சென்றனர்.

இராணுவத்தினர் சைக்கிளில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டமையைக் காணமுடிந்தது. இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே அப்பகுதியில் இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர் எனக் கூறப்படுகிறது. (ஐ)

## துமிந்தவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டி அங்கிருந்து விரட்டியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எம்.பிக்கள் சிலரும் தற்போதைய அரசின் அமைச்சர்கள் சிலருமே ஜனாதிபதியைச் சந்தித்து, இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

அப்போது அவர்கள், ரஞ்சன் ராமநாயக்க எம்.பியின் அலைபேசிக் கலந்துரையாடல்கள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளால், சாதகமான சூழ்நிலையொன்று தோன்றியிருப்பதாகவும் இதைப் பயன்படுத்தி, துமிந்த சில்வாவை விடுவிப்பது நல்லதென்றும் கூறியுள்ளனர்.

இதனால் கோபமடைந்துள்ள ஜனாதிபதி, இப்போதைக்குத் தான் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள் போதுமென்றும் இன்னுமின்னும் பிரச்சினைகளை ஏற்படுத்தாதீர்கள் என்றும், இதற்கான தேவை தனக்கில்லை என்றும் கூறி, அவர்களைக் கடுந்தொனியில் திட்டியுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

இவ்வாறு ஜனாதிபதியைச் சந்தித்து விட்டு வெளியேறியுள்ள எம்.பிக்கள், அமைச்சர்கள், மீண்டும் தனியாகக் கூடி, பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர் என்றும் இதே யோசனையை, மீண்டும் நல்ல சந்தர்ப்பம் பார்த்து, ஜனாதிபதியிடம் முன்வைக்க வேண்டுமென்று தீர்மானித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## வெளிநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

காணிப் பிரச்சினை காரணமாக இரண்டு தரப்பினருக்கும் இடையில் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு 7.30 மணியளவில் வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றது. இதன்போது வெளிநாட்டிலிருந்து வந்த நபர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டமையை அடுத்தே அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வாள்வெட்டுக்குழுவினர் வந்த வாகனங்களைக் கைப்பற்றிய பொலிஸார் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ஐ)

## மன்னிப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோருகின்றேன்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் ஈ.பி.டி.பியின் மாநகரசபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான மு.றெமீடியஸ். அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில் –

சாதியை இழிவுபடுத்தும் விதமாக கூட்டமைப்பின் தர்சானந்த் பேஸ்புக்கில் இட்ட பதிவினாலேயே சர்ச்சை உருவானதாக அவர் தெரிவித்தார். தமிழ்த் தேசியம் எனப் பேசிக்கொண்டு, சாதி மற்றும் பிற காரணங்களினால் தமிழ் மக்களுக்குள் கூறு போடும் முயற்சியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்வதாக அவர் குற்றம் சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், – யாழ். மாநரசபையில் நேற்று முன் தினம் ஏற்பட்ட சிறு குழப்பநிலையினால், மக்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்படும் நிலையேற்பட்டது. இதற்காக மக்கள் மத்தியில் பகிரங்க மன்னிப்பு கோருகிறேன்.

சில விடயங்களில் நாம் எதுவும் செய்ய முடியாது. தர்சானந்த் எப்பொழுதும் துறைசார்ந்தவர்களை தேவையற்ற விதமாகக் கதைப்பதும், தொழிலை இழிவாக கதைப்பதையும் வழக்கமாகக் கொண்டிருப்பவர்.

நேற்று முன் தினம் நான் அந்தச் சர்ச்சையை ஆரம்பிக்கவில்லை. எமது உறுப்பினர் ஒருவர்தான், தர்சானந்தின் முகநூல் குறிப்பு பற்றி கேள்வியெழுப்பினார். தர்சானந்த் தனது பேஸ்புக்கில், குலம் (சாதி) குறித்த சொற்களைப் பயன்படுத்தி, சட்டத்தரணியென்றும் குறிப்பிட்டு எழுதியிருந்தார். இதை முதல்வரின் கவனத்துக்குக் கொண்டு வந்தேன். முதல்வரும் அவரை கூப்பிட்டு விசாரித்தார். எனினும், தர்சானந்த் தனது குறிப்பை எடுக்கவில்லை.

நேற்று முன் தினம் அமர்வில், அவர் சாதியை தொடர்புபடுத்தி எழுதியதைக் கண்டித்தோம். ஆனால், அவர்களுக்குத் தேர்தல் வந்தால் புலிகளையும், புலிகளின் தலைவரையும் மதிப்பாகப் பேசி வாக்கை பெற்றுக் கொள்வார்கள். தேர்தல் முடிந்ததும், இப்படி பேசுவார்கள். அவர் சாதி தொடர்பாக என்னை அப்படி பேசினால், அந்த வட்டத்திற்குள் எமது தலைவர் பிரபாகரனும் அடங்குவார்.

இதனைக் கண்டிக்கவேண்டிய பொறுப்பிருக்கிறது. அதை செய்தோம். நான் நேற்று கொஞ்சம் ஆவேசப்பட்டேன். அது தவிர்க்க முடியாமலிருந்தது.

நான்சட்டத்தரணியாக ஆகாயத்திலிருந்து குதிக்கவில்லை. எனது தந்தையார் பிடித்த ஒவ்வொரு மீனும்தான் என்னை சட்டத்தரணியாக்கியது. அதை நக்கலாக, இழிவாக, மறைமுகமாக குறிப்பிட்டு எழுதியமையை என்னால் ஒருபோதும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

எனது தொழிலையும் இழிவுபடுத்தினார். நான் ஹெரோயின் வழக்கு எதிலும் மேல்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. தொழில் விடயத்தில் எனக்கு கர்வமுண்டு. எனது தொழிலின் முதல் 11 வருடமும் யாரிடமும் பணம் வாங்கவில்லை. நான் செய்ய அனைத்து வழக்கும் விடுதலைப்புலிகளின் சந்தேகநபர்களிற்காக, இராணுவத்தினால், இயக்கங்களால் இழைக்கப்பட்ட குற்றச்செயல்கள் தொடர்பாக வழக்குகள் செய்தேன். யுத்த காலத்தில் என்னைத் தவிர வேறு எந்தச் சட்டத்தரணியும் இப்படியான வழக்குகளை செய்யவில்லை.

யுத்தத்தினால் அனைத்தையும் இழந்து, மக்கள் மத்தியில் சாதிய உணர்வுகளும் இல்லாமல் போய்க்கொண்டிருக்கும் நிலையில், இவற்றை மீளப் பேசுவது ஏற்க முடியாதது.

தமிழ் தேசியம் பேசுகிறார்கள். தேசியம் என்பது ஒரு வர்க்கம். குழாம். கட்சி, மத, பிரதேச, சாதி வேறுபாடுகள் இருக்க முடியாது. நாம் அனைவரும் தமிழர் என்பதுதான் தேசியம். தேசியம் பேசியபடி, இப்படியான நடவடிக்கையில் இவர்கள் ஈடுபடுவது ஏற்க முடியாதது.

இவ்வாறான கருத்துக்கள், நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மக்கள் அனுமதிக்க கூடாது. இவர்களை நிராகரிக்க வேண்டும். அவர் சார்ந்த கட்சிகள் நடவடிக்கையெடுக்க வேண்டும்.

முதல்வரும் எனது இரத்த உறவுதான். தர்சானந்த் எழுதிய பேஸ்புக் பதிவின் கீழ், உங்கள் முதல்வருக்கு இது பொருந்தாதா எனக் கேள்வியெழுப்பியிருந்தனர். எனினும், தர்சானந்த் அதை அகற்றவில்லை – என்றார்.

## துப்பாக்கியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேகநபர் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப் படவுள்ளார். (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

30 ஆண்டுகள் போரினால் பாதிப்புக்குள்ளான வடக்கு மாகாண மக்களின் மீள்குடியமர்வு, இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலுள்ள தமிழ் மக்கலின் நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டியதன் அவசியம், மீள்குடியமர எதிர்பார்த்து வந்துள்ள மக்களின் அடிப்படை வசதிகள், வாழ்வாதாரம், குடியிருப்பதற்கான நிரந்தர வீடுகள், அவற்றிக்குத் தேவையான நிதிவசதிகள் பற்றிக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

பலாலி விமான நிலைய அபிவிருத்தி, இளையோருக்கான வேலைவாய்ப்பு மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் மீள்குடியமர்வு, வீடுகள், வீதிகள் அபிவிருத்தி, வேலைவாய்ப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி விடுவிக்கப்படாமல் தடைப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்துக்கு என வரவு–செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி, சிறப்பு நிதி ஒதுக்கீடுகள் விடுவிக்கப்படாமலிருப்பதால் மீண்டும் மக்கள் பெரும் அவலங்களுக்குள்ளாகி வருகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆளுநரிடம் எடுத்துரைத்தார்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவவேண்டும், உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஒத்துழைத்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுப்பார் என வடக்கு மாகாண ஆளுநர் இதன்போது உறுதியளித்தார் – என்றுள்ளது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## வாக்குறுதிகளை மீறினால் வரும் விபரீதம்

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் தானும் சேர்ந்து அனுசரணைப் பணி வகித்து, பிரேரித்து நிறைவேற்றிய தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முடியாது, அவற்றை நிராகரிக்கின்றோம் என்று சர்வதேச சமூகத்தின் முகத்தில் அடிப்பது போல தனது முடிவை அறிவிப்பதற்குத் தயாராகி வருகின்றது இலங்கை.

இலங்கையில் இறுதி யுத்த காலத்தில் இடம்பெற்ற விடயங்களை ஒட்டி **"இலங்கையில் மீள் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகள் ஆகியவற்றை மேம்படுத்தல்"** என்ற தலைப்பில் 2015 இற்கும் 2017 இற்கும் இடையில் மூன்று தொடர் தீர்மானங்கள் இவ்வாறு நிறைவேற்றப்பட்டன.

இலங்கையில் இறுதி யுத்த காலத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகள் குறித்து சர்வதேச தரத்துக்கு அமைய நீதி, நேர்மையான விசாரணைகளை நடத்தி, குற்றமிழைத்தோரைச் சட்டத்தின் முன் நிறுத்திப் பொறுப்புக் கூறலை நிலைநாட்டும் கடப்பாட்டை நிறைவு செய்வதற்கு அத்தீர்மானம் மூலம் இலங்கை இணங்கியிருந்தது.

வெறுமனே இணக்கம் மட்டுமல்ல, அந்த விடயங்களை அடக்கிய தீர்மான வாசகங்களின் தயாரிப்பில் தானும் பங்குபற்றி, அதை இறுதி செய்து, தானும் சேர்ந்து ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடர்களில் பிரேரித்து நிறைவேற்றச் செய்திருந்தது இலங்கை.

அப்படி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வாசகங்களுக்கு அமைய, தான் நிறைவு செய்ய வேண்டிய கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு வழங்கப்பட்ட கால அவகாசத்தில் அவற்றை நிறைவேற்ற முடியாத நிலையில், அதற்கு மேலும் காலக்கெடு கோரும் பிரேரணைகளை மீண்டும் தானே சேர்ந்து தயாரித்து, இறுதி செய்து, பிரேரித்து, கவுன்ஸிலின் தீர்மானமாக நிறைவேற்றச் செய்தது இலங்கை.

ஒரு தடவையல்ல. இப்படி இரண்டு தடவைகள் கால அவகாசம் – கால நீட்சி – வழங்கும் தீர்மானங்களை சர்வதேச அவையிலே நிறைவேற்றச் செய்து விட்டு, ஐந்து ஆண்டு காலத்தை இப்படியே இழுத்தடித்த பின்னர், அந்த தீர்மான விடயங்களை நிராகரிக்கிறோம், அவற்றை ஏற்க மாட்டோம் என்று புதுக்கதை விடத் தயாராகின்றது கொழும்பு.

எதிர்வரும் பெப்ரவரி – மார்ச் மாதத்தில் நடைபெறவிருக்கும் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் கூட்டத்தில் இதைத்தான் அறிவிப்பதற்கு இலங்கையின் புதிய அரசு – கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு – தயாராகி வருவதாகத் தெரிகின்றது.

தனது இந்தத் தலைகீழ் மாற்றப் போக்குக்கு எதிராக சர்வதேசத் தரப்பில் எழக் கூடிய எதிர்ப்புகள், நெருக்குவாரங்கள், அழுத்தங்களைச் சமாளிப்பதற்காகத் தனது வழமையான நட்பு நாடுகளின் உதவியைக் கோருவதற்கு இலங்கை முடிவு செய்திருப்பதாகத் தெரிகின்றது.

சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், ஜப்பான் போன்ற இலங்கையின் பாரம்பரிய நட்பு நாடுகள் அதற்கு உதவக் கூடும். ஜெனீவாவில் இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டை அவை எடுக்கக் கூடும்.

ஆனால், கடந்த புதனன்று நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி கோட்டாபயவின் கொள்கை விளக்க உரையின் மீதான விவாதத்தில் உரையாற்றியபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் சுட்டிக்காட்டியமைபோல, சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய உறுதிமொழிகளில் இருந்து இலங்கை பின்வாங்குமானால் அதன் விளைவுகள் இலங்கையைப் பொறுத்தவரை விபரீதமாகத்தான் அமையும்.

**"இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பேச்சு மூலமான நியாயத் தீர்வு ஒன்று கிட்டுவதற்கு விடுதலைப் புலிகள் இயக்கமே இடைஞ்சலாக உள்ளது என்பதே இலங்கை மற்றும் இந்தியாவின் கருத்தாக இருந்தது. இந்தப் பின்புலத்தில் புலிகள் தோற்கடிக்கப்பட்டமை நீதியான அரசியல் தீர்வு கிட்டுவதற்கான முன்னோடி வாய்ப்பாகக் கருதப்பட்டது. இதை யொட்டி இந்தியாவுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் பல்வேறு உறுதிப்பாடுகள் வழங்கப்பட்டன. அவற்றின் அடிப்படையிலேயே புலிகளைத் தோற்கடிப்பதற்கான உதவி, ஒத்தாசைகளை இந்தியா உட்பட சர்வதேச சமூகத்திடமிருந்து இலங்கை பெற்றுக் கொண்டது. அந்த உறுதிமொழிகளை வழங்கி, அவற்றின் அடிப்படையில் புலிகளைத் தோற்கடிக்க உதவி, ஒத்தாசைகளைப் பெற்று, காரியம் முடிந்ததும் வாக்குறுதிகளை – கடப்பாடுகளை – நிறைவேற்றாமல் இலங்கை கைவிடுவது அல்லது அதனை மீறி நடப்பது விபரீதத்தைத் தான் தரும்"** – என்று சம்பந்தர் குறிப்பிடுகின்றார்.

அந்த விபரீதம் எத்தகையதாக அமையும் என்பதை கொழும்பு இன்னும் உய்த்துணரவில்லை என்றே தோன்றுகின்றது.

# நாட்டைச் சீராக்கவே மக்கள் கோட்டாபயவை ஆதரித்தனர்



## கூறுகின்றார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 11

தவறான பாதையில் பயணித்துக்கொண்டிருந்த நாட்டைச் சீர்ப்படுத்துவதற்கான தலைமைத்துவமே மக்களின் தேவையாக இருந்ததேயன்றி கோட்டாபய ராஜபக்ஷ என்ற தனிநபர் அல்லர் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தான் தொடர்ந்து அதிகாரத்தில் இருக்க மக்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்றும் தனது காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இயன்றளவு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அவர் மேலும் கூறினார்.

நேற்று முன்தினம் முற்பகல் அலரி மாளிகையில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் இளைஞர் சம்மேளனத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இளம் தலைமுறையினதும் ஒட்டுமொத்த மக்களினதும் எண்ணங்கள் மற்றும் தேவைகள் தொடர்பில் சிறந்த புரிந்துணர்வுடன் செயற்படுவதற்கு தமது அரசு உயர்ந்த அளவில் முயற்சிக்கும் எனத் தெரிவித்த ஜனாதிபதி, தன்னை ஜனாதிபதியாக நியமித்ததைப் போன்று தனது கொள்கைகளை மக்களுக்காக முன்னெடுத்துச் செல்வதற்கும் இளம் தலைமுறையின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறார் எனக் குறிப்பிட்டார்.

கடந்த ஐந்து வருட காலமாக நாட்டின் பொரு ளாதாரமும் அரச நிறுவனங்களும் வீழ்ச்சியைச் சந்தித்தன. பொருளாதாரத்தை பலப்படுத்தி இலாபமீட்டும் வினைத்திறன் மிக்க அரச நிறுவ னக் கட்டமைப்பைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி இதன்போது உறுதியளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்கு ஏனைய நாடுகளுடன் இணைந்து செயற்படத் தொழிநுட்பப் பயன்பாடு அவசியமா கும். நவீன தொழிநுட்பத்துக்கும் தகவல் தொடர் பாடலுக்கும் முன்னுரிமையளித்து கல்வி முறை மையை மாற்றுவதற்கான தேவைப்பாடு காணப்படுகின்றது. அதனைத் துரிதப்படுத்துவதனூடாக இளைஞர் யுவதிகளுக்கான பெருமளவு வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் அதிக சம்பளத்தை வழங்கவும் முடியும். வளர்ச்சியடைந்த நாடுகளை முன்னுதாரணமாகக் கொண்டு 20 வயதாகும் போது பல்கலைக்கழகத்திலிருந்து இளைஞர்கள் தொழிற்துறையில் ஈடுபட நடவடிக்கை எடுக்க வேண்டும். பல்கலைக்கழகங்களுக்கு இணைத் துக் கொள்ளப்பட்ட பின்னர் இடம்பெறும் பகிடிவதை காரணமாக ஏற்படும் பாதிப்புகளை தடுக்க வேண்டும்.

தகவல் தொழிநுட்பத்துறையை விருத்தி செய்வதனூடாக பல துறைகளில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த முடியும். சுற்றுலா, பெருந்தோட்ட மற்றும் விவசாய துறைகளினூடாக வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வையும் நாட்டின் பொருளாதாரத்துக்கு உயர் வருமானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும் – என்றார். (ஐ)

# முதலாவது அனைத்துலக தமிழியல் மாநாடு யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று ஆரம்பம்!

முதலாவது அனைத்துலகத் தமிழியல் மாநாடு, யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது.

'வரலாற்றுப் போக்கில் தமிழியல் ஆய்வுகள்' எனும் தொனிப்பொருளில் இந்த மாநாடு நடைபெறுகிறது.

இந்த மாநாடு யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் ஏற்பாட்டில், தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ம.இரகுநாதன் தலைமையில் நடைபெறுகின்றது.

நேற்றைய நிகழ்வின்போது ஆய்வரங்கக் கட்டுரை வெளியீட்டு தொகுதியைத் தமிழ்த்துறைத் தலைவர் இரகுநாதன் வெளியிட்டு வைக்க, யாழ். பல்கலைக்கழகத் தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் கந்தசாமி பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் கந்தசாமி கலந்துகொண்டார்.

யாழ் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் தமிழகத்தில் இருந்து வருகை தந்துள்ள பேராசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டு நிகழ்வுகள் இன்றும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ – 07)

# எம்.பிக்களை கைது செய்ததைவிட இந்த அரசு வேறு என்ன செய்தது?

## பாலித ரங்கே பண்டார கேள்வி

கொழும்பு, ஜன. 11

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த போது கைசாத்திட்ட எக்ஸா ஒப்பந்தம், இலங்கைக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்துமெனத் தெரிவித்த ஐ.தே.கவின் பாலித ரங்கே பண்டார எம்.பி, இந்த அரசு ஆட்சிக்கு வந்ததில் இருந்து ஐ.தே.க எம்.பிக்களைக் கைது செய்வதை தவிர வேறு எதை செய்தது? என்றும் கேள்வி எழுப்பினார்.

கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுமென வழங்கிய வாக்குறுதிகளின் பிரகாரமே, புதிய அரசு ஆட்சிப்பீடமேறியது. எனினும், அது கேள்விக்குறியாகவே உள்ளது.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளதுள்ளன. அது மக்களின் வாழ்க்கை சுதந்திரத்தைப் பறிப்பதாகவே அமைந்துள்ளது.

வரிகளைக் குறைப்பதாக அரசு அறிவித்திருந்தாலும் எந்தவொரு பொருளின் விலையும் இதுவரை குறைவில்லை. பொய்யான வாக்குறுதிகள் ஊடாக, தொடர்ச்சியாக ஆட்சியில் நீடிக்க முடியாது..

அரச நிறுவனங்களில் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட பலரும் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாகின்றனர். இந்த நிலையைக் கருத்தில்கொண்டே, நாடாளுமன்ற தேர்தலில் யாருக்கு வாக்களிக்கவேண்டுமென்பதை, மக்கள் தீர்மானிக்கவேண்டும்.

விவசாயிகள் பெரும் உரத் தட்டுப்பாட்டை எதிர்கொள்கிறார்கள். இதனால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்ததும், எரிபொருளின் விலையைக் குறைத்து, சம்பளத்தை அதிகரித்தது. ஆனால், இந்த அரசு ஆட்சிக்கு வந்ததில் இருந்து ஐ.தே.க எம்.பிக்களைக் கைது செய்வதை தவிர வேறு எதை செய்தது? – என்றார்.

**நாளை 12.01.2020 – ஞாயிற்றுக்கிழமை**

| | |
|---|---|
| நட்சத்திரம்: பூசம் பி.ப 1.58 வரை | இராகுகாலம் : 5.03 – 6.33 |
| திதி : துதியை மு.இ 10.38 வரை | சுப நேரம் : 9.33 – 11.03 |

# அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்!

## யாழ்.நகரில் நேற்று ஆர்ப்பாட்டம்







யாழ்ப்பாணம், ஜன. 11

தமிழ் அரசியல் கைதி சிறையில் உயிரிழந்தமையைக் கண்டித்தும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரியும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வலியுறுத்தியும் யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக நேற்று நண்பகல் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தண்டனைக் கைதியாக தடுத்துவைக்கப்படிருந்த தமிழ் அரசியல் கைதி ஒருவர் சுகயீனம் காரணமாகக் கடந்த மாத இறுதியில் உயிரிழந்துள்ளார்.

19 வயதில் கைது செய்யப்பட்டு தொடர்ச்சியாக சுமார் 27 ஆண்டுகள் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த செ.மகேந்திரன் (வயது - 46) என்ற அரசியல் கைதியே உயிரிழந்தார்.

கடுமையான சுகயீனத்துக்குள்ளான அவர் உரிய சிகிச்சைகள் சீராக வழங்கப்படாமை காரணமாக உயிரிழந்தார் என்று குற்றஞ் சாட்டப்பட்டது.

அவரது உயிரிழப்புக்குக் கண்டனம் தெரிவித்தும் சிறைகளில் வாடும் அனைத்து அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்கக் கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டோர் வலியுறுத்தினர். (ஐ - 07)

# ரஞ்சனின் குரல்பதிவுகள் வெளியிடுவது நிறுத்தம்!

## முக்கிய பெண் பிரமுகர்கள் சிக்கும் அபாயம்

கொழும்பு, ஜன. 11

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் குரல் பதிவுகளை வெளியிடுவது இரண்டு வாரங்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர் எனக் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மாதிவெல பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ வீட்டுத் தொகுதியில் வைத்து ரஞ்சன் ராமநாயக்க அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதன்போது அவரிடமிருந்து இறுவெட்டுக்கள் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டிருந்தன.

இவ்வாறு கைப்பற்றப்பட்டிருந்த இறுவெட்டுக்களிலுள்ள முக்கிய குரல் பதிவுகள் அடுத்தடுத்து வெளியாகி இலங்கை அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தன.

இந்த விடயம் தொடர்பாக ஆராயக் குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் ரஞ்சன் ராமநாயக்கவின் குரல் பதிவுகளை வெளியிடுவது இரண்டு வாரங்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது.

முக்கிய பிரமுகர்களாக இருக்கும் பல பெண்கள், ரஞ்சன் ராமநாயக்கவுடன் தொலைபேசி ஊடாகப் பாலியல் தொடர்புகளை வைத்திருந்தனர் எனச் சந்தேகிக்கப்படும் குரல் பதிவுகள் கிடைத்துள்ளமை காரணமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் பெண்களில் மக்கள் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் பிரபலமானவர்களின் மனைவிமார், தனியார், அரச நிறுவனங்களின் பிரதானிகள் மற்றும் பிரபல பெண் கலைஞர்களும் உள்ளடங்குகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

இந்தக் குரல்பதிவுகள் வெளியானால் எதிர் மற்றும் ஆளும் தரப்பைச் சேர்ந்த பலரும் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் அவற்றை வெளியிடாமல் இருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

# ரஞ்சனுக்கு நானும் அழைப்பு எடுத்தேன்

## பிரதமர் மஹிந்த கூறுகிறார்



கொழும்பு, ஜன. 11

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்குத் தாமும் தொலைபேசி அழைப்புக்களைக் கடந்த காலங்களில் மேற்கொண்டார் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே பிரதமர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தொலைபேசி அழைப்புக்கள் மேற்கொண்டு அதன் ஒலிப்பதிவு வெளியாகி சர்ச்சையாகியுள்ளது. நானும் கடந்த காலங்களில் ரஞ்சனுக்கு தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டிருந்தேன்.

அவருக்கு பிறந்தநாள் வாழ்த்துகளைச் சொல்லவே நான் அவ்வாறு அழைப்புகளை எடுத்திருந்தேன். எனவே நான் மேற்கொண்ட அழைப்புகள் குறித்து யோசிக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை. – என்றார். (ஐ)

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# வளைகுடாப் பகுதியில் போர் பதற்றம் தணிய வேண்டும் என்கின்றது இந்தியா

புதுடெல்லி,ஜன.11
வளைகுடா பகுதியில் விரைவில் போர் பதற்றம் தணிய வேண்டும் என்பதையே இந்தியா விரும்புகிறது என இந்தியத் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

ஈரான் இராணுவத் தளபதி காசிம் சுலைமானியை அமெரிக்கப் படைகள் ஏவுகணை மூலம் தாக்கி கொன்றமையால் பதிலுக்கு ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படைத்தளங்கள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இதனால் இருநாடுகள் இடையே பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் ரவீஷ்குமார் கூறும்போது -

''வளைகுடா பகுதியில் விரைவில் போர் பதற்றம் தணிய வேண்டும் என் பதையே இந்தியா விரும்புகிறது. அந்த பிராந்தியத்தின் முக்கிய நாடுகளுடன் இந்தியா தொடர்பில் உள்ளது. அந்தபகுதியில்உள்ளசூழ்நிலையை இந்தியா மிகவும் உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது'' என்றார்.

முன்னதாக ஈரான், ''போர் பதற்றத்தை தணிக்க இந்தியா எந்த அமைதி முயற்சி மேற்கொண்டாலும் வரவேற்போம்'' என்று கூறியிருந்தது.

# அண்டை நாட்டு சிறுபான்மையினர் பற்றி பாக்.கருத்துக் கூற அருகதை இல்லை

## சீறுகின்றது இந்தியா



சொந்த நாட்டின் சிறுபான்மை மக்களைப்பற்றி அக்கறையில்லாத நாட்டுக்கு அண்டை நாட்டின் சிறுபான்மையினரைப் பற்றிக் கருத்து கூற எந்தத் தகுதியும் இல்லை என்று பாகிஸ்தானுக்கு மத்திய வெளியுறவு அமைச்சகம் கடுமையான பதிலடி கொடுத்துள்ளது.

பாகிஸ்தானில் உள்ள சீக்கியரின் புனிதத் தலமான நான்கனா சாகிப் மீது கடந்த வாரம் வெள்ளிக்கிழமை வன்முறை கும்பல் ஒன்று கல்வீசித் தாக்கியது. இதைத் தொடர்ந்து பொவர் நகரில் சீக்கிய இளைஞர் ஒருவர் மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவங்கள் பாகிஸ்தான் தனது முகத்தை பார்த்துக் கொள்வதற்கான கண்ணாடிகள் என்று தெரிவித்துள்ள வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ரவீஷ்குமார், இந்தியாவில் நடைபெறும் போராட்டங்கள் குறித்து கருத்துக் கூறிய பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், தமது நாட்டில் சிறுபான்மை மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

# காஷ்மீரில் தகவல் தொடர்புக் கட்டுப்பாடுகளை ஒரு வாரத்திற்குள் மீளாய்வு செய்ய உத்தரவு

## இந்திய மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் அதிரடிக் கட்டளை

காஷ்மீரில் தகவல் தொடர்புக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை இந்திய மத்திய அரசு ஒரு வாரத்திற்குள் மீளாய்வு செய்ய வேண்டும் என இந்திய உச்சநீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பிதிருக்கின்றது.

தனிநபர் சுதந்திரம், தனிநபர் பாதுகாப்புப் போன்றவற்றைப் பாதுகாக்க வேண்டியது நீதிமன்றத்தின் கடமை என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஜம்மு–காஷ்மீருக்கு வழங்கப்பட்டிருந்த சிறப்பு அந்தஸ்து, கடந்த ஒகஸ்ட் 5 ஆம் திகதி ரத்துச் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து, காஷ்மீரில் மக்கள் நடமாட்டத்துக்கும் தகவல் தொடர்பு சேவைகளுக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. முன்னாள் முதல்வர் பரூக் அப்துல்லா, உமர் அப்துல்லா, மெகபூபா முப்தி உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர்.

பிற மாநிலங்களில் இருந்து அரசியல் தலைவர்கள் ஜம்மு காஷ்மீர் செல்வதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இந்த கட்டுப்பாடுகளை எதிர்த்து காங்கிரஸ் மூத்த தலைவர் குலாம் நபி ஆசாத், டைம்ஸ் பத்திரிகை ஆசிரியர் அனுராதா பாசின் உள்ளிட்டோர் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

மனு மீதான தீர்ப்பின்போது உச்சநீதிமன்றம் கூறுகையில், இணையம் என்பது கருத்துரிமையின் ஒரு பகுதி. தனிநபர் சுதந்திரத்தையும், தனிநபர் பாதுகாப்பையும் காக்க வேண்டியது நீதிமன்றத்தின் கடமை. இணையதளத்தின் மூலம் கருத்துக்கள் தெரிவிப்பது அடிப்படை உரிமை. இணையத் தளக் கட்டுப்பாடுகள் தொடர்பாக மக்களுக்கு மத்திய அரசு தெரிவிக்க வேண்டும். காஷ் மீரில் தகவல் தொடர்புக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை மத்திய அரசு ஒரு வாரத்திற்குள் மீளாய்வு செய்ய வேண்டும் – என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# மலேசிய இறக்குமதிகளின் மீது தடை விதிக்க இந்தியா முஸ்தீபு



இந்தியாவின் குடியுரிமைத் திருத்தச் சட்டம், காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து ரத்து உள்ளிட்டவற்றுக்கு எதிராக மலேசியப் பிரதமர் மகாதிர் முகம்மது பேசி வருவதன் எதிரொலியாக, மலேசிய இறக்குமதிகளைத் தடை செய்யலாமா என மத்திய அரசு ஆலோசித்து வருகிறது.

இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்கள் குறித்து மலேசிய பிரதமர் மகாதிர் முகம்மது ஐ.நா. பொதுச் சபையில் பேசியமை சர்ச்சையை ஏற்படுத்தியது. இதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் பாமாயில், மின்னணுப் பொருள்கள் உள்ளிட்ட மலேசிய இறக்குமதிக்கு தடை விதிக்கப்படலாம் என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இது நடைமுறைக்கு வந்தால் இந்தியாவின் பொருளாதாரத் தடைக்கு ஆளாகும் முதலாவது வர்த்தகக் கூட்டாளியாக மலேசியா மாறிவிடும்.

# தினசரி 80 கொலைகள் 91 பாலியல் கொடூரங்கள்

## 2018 இல் இந்திய நிலைமை இது



புதுடெல்லி,ஜன.11
கடந்த 2018 ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் நடைபெற்ற குற்றங்கள் பற்றிய புள்ளி விவரங்களை தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டு இருக்கிறது. அதன்படி அந்த ஆண்டில் இந்தியாவில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 80 கொலைகள் மற்றும் 91 பாலியல் பலாத்கார சம்பவங்கள் நடந்து இருக்கின்றன.

ஆண்டு முழுவதும் 29 ஆயிரம் கொலை வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றன. இது முந்தைய ஆண்டை விட 1.3 சதவீதம் அதிகமாகும். பெரும்பாலும் அதிகபட்சமான கொலைகள் சொத்துத் தகராறு, பழிக்குப்பழி வாங்குதல் மற்றும் ஆதாயத்தைக் கருதும் நோக்கத்துடன் நடந்து இருக்கின்றன.

33 ஆயிரம் பாலியல் வழக்குகள் பதிவாகி இருக்கின்றன. குறிப்பாக பெண்களுக்கு எதிராக முந்தைய 2017 ஆம் ஆண்டைவிட 19 ஆயிரம் வழக்குகள் அதிகரித்து 3 லட்சத்து 78 ஆயிரம் குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றன.

இதேபோல் ஆண், பெண் மற்றும் குழந்தைகள் கடத்தல் சம்பந்தமாக 1 லட்சத்து 5 ஆயிரம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றன. இது கடந்த ஆண்டை விட 10 சதவீதம் அதிகமாகும்.

2018 ஆம் ஆண்டில் மொத்தம் 50 லட்சத்து 74 ஆயிரம் கொடுஞ்செயல் குற்ற வழக்குகள் பதிவாகி இருக்கின்றன. முந்தைய ஆண்டில் 50 லட்சத்து 7 ஆயிரம் கொடுஞ்செயல் குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் மிகப்பெரிய ரயில் பாலம் காஷ்மீரில் கட்டுமானப் பணிகள் தீவிரம்



ஜம்மு காஷ்மீரை இந்தியாவின் இதர பகுதிகளுடன் இணைக்கக் கூடிய இந்தியாவின் மிகப்பெரிய ரயில் பாலம் செனாப் நதியின் மீது 359 அடி உயரத்தில் கட்டப்பட்டு வருகிறது.

பாரிஸின் புகழ்பெற்ற ஈபிள் கோபுரத்தின் உயரத்தை விட இது 35 அடி கூடுதலாகும். அம்பு போன்ற வளைவு கொண்ட இந்த மிகப்பெரிய பாலத்தை ரயில்வே நிர்வாகம் அமைத்து வருகிறது. ரயில்வேயின் 150 ஆண்டு வரலாற்றில் மிகவும் சவாலான பணி இது என்றும் அதிகாரிகள் விளக்கம் அளித்தனர்.

5462 தொன் இரும்பு பயன்படுத்தப்படவுள்ள இப்பாலத்தின் கட்டுமானப் பணிகள் தாமதமாகி உள்ளன. இந்த ஆண்டே அவை முடிவடையும் என்று எதிபார்க்கப்பட்டது. ஆனால் அடுத்த ஆண்டின் இறுதிக்குள் இந்த பாலம் திறக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# உக்ரைன் விமானத்தை ஈரானே தவறுதலாகச் சுட்டு வீழ்த்தியதா?

## அமெரிக்கா,கனடா குற்றச்சாட்டு; தெஹ்ரான் மறுப்பு

ஒட்டவா,ஜன.11

விபத்துக்குள்ளானதாக கூறப்படும் உக்ரைன் விமானம் ஈரானால் தவறுதலாகச் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அமெரிக்கா, கனடா சந்தேகம் எழுப்பியுள்ளன.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள இமாம் கோமெய்னி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து 176 பயணிகளுடன், உக்ரைன் தலைநகர் கீவுக்கு புறப்பட்டு சென்ற போயிங் 737 ரக விமானம் புறப்பட்ட சில நிமிடங்களிலேயே விபத்துக்குள்ளானது. இதில் விமானத்தில் பயணம் செய்த 82 ஈரானியர்கள், 63 கனடா நாட்டைச்சேர்ந்தவர்கள், உக்ரைன் நாட்டைச் சேர்ந்த 11 பேர் என மொத்தம் 176 பேரும் பலியாகினர்.

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே போர் பதற்றம் அதிகரித்துள்ள சூழலில் இந்த விபத்து நடந்துள்ளது. எனவே விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கலாம் என்ற யூகங்கள் எழுந்துள்ளன. உலகளாவிய விமானப் போக்குவரத்துத்துறை விதிகளின் கீழ், இந்த விபத்து குறித்து விசாரணையை வழி நடத்த ஈரானுக்கு உரிமை உண்டு. அந்த அடிப்படையில் தனி விசாரணை குழுவை அமைத்து ஈரான் இந்த விபத்துக் குறித்து விசாரித்து வருகிறது.

பொதுவாக இதுபோன்ற விசாரணைகளில் அந்த விமானத்தை தயாரித்த நிறுவனமும், விமானத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட கருப்பு பெட்டியில் உள்ள தகவல்களை ஆய்வு செய்யும் திறன் பெற்ற சில நாடுகளும் ஈடுபடுவது வழக்கமானது. ஆனால், விபத்துக்குள்ளான உக்ரைன் விமானத்தில் இருந்து மீட்கப்பட்ட கருப்பு பெட்டியை அதன் உற்பத்தியாளரான அமெரிக்காவை சேர்ந்த போயிங் நிறுவனத்திடமோ அல்லது அமெரிக்க அரசிடமோ ஒப்படைக்க மாட்டோம் என்று ஈரான் அறிவித்துள்ளது. இது சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது.



மேலும், உக்ரைன் விமானம் ஏவுகணையால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக தங்களுக்கு உளவுத் தகவல்கள் கிடைத்துள்ளன என்று கனடா நாட்டுப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார். அதே போல், அமெரிக்காவும் இதே சந்தேகத்தை வெளிப்படுத்தியுள்ளது. ஈரான், எதிர்பாராத விதமாக விமானத்தை சுட்டுவீழ்த்தியிருக்கலாம் என்று அமெரிக்கா அதிகாரிகள் சந்தேகத்தை எழுப்புகின்றனர்.

ஆனால், கனடா மற்றும் அமெரிக்காவின் குற்றச்சாட்டை ஈரான் திட்டவட்டமாக மறுத்துள்ளது. விமானம் விபத்துக்குள்ளான அதே சமயத்தில், உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானங்கள் பல, அதே வான்பரப்பில் பறந்ததாகவும் கூறியுள்ளது. கனடா தன்னிடம் உள்ள உளவுத் தகவல்களை அளித்து விமான விபத்து குறித்த விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று ஈரான் கேட்டுக்கொண்டதாக மேற்கத்திய ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

# இளவரசர் ஹரி – இளவரசி மேகன் தம்பதி பிரிட்டிஷ் அரச குடும்பத்திலிருந்து விலகல்



இங்கிலாந்து அரச குடும்பத்தில் இருந்து இளவரசர் ஹரி மற்றும் இளவரசி மேகன் ஆகிய இருவரும் வெளியேறுகின்றனர்.

இங்கிலாந்தின் அரச குடும்பம் என்றாலே உலக அளவில் தனி மரியாதை உண்டு. அந்த நாட்டு அரசு எடுக்கும் முடிவுகளில் அரச குடும்பத்தின் முக்கிய பங்கு இருக்கும். அரச குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் அரசின் ஓர் அங்கமாக பார்க்கப்படுகிறார்கள்.

இந்த நிலையில் அரச குடும்பத்தின் மூத்த உறுப்பினர்கள் என்ற பொறுப்பில் இருந்து விலகுகின்றனர் என இளவரசர் ஹாரி, இளவரசி மேகன் தம்பதி அறிவித்துள்ளனர்.

இங்கிலாந்து அரசு மற்றும் அரச குடும்பத்தின் அதிகாரம் மீது ஹரி, மேகன் ஆகிய இருவரும் பற்றில்லாமல் இருந்து வந்த நிலையில் அந்தத் தம்பதி இப்படியொரு அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக, அவர்கள் இன்ஸ்டாகிராமில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு உள்ளனர். அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:–

பல மாத ஆலோசனைகளுக்குப் பிறகு இந்த வருடத் தொடக்கத்தில் ஒரு முக்கிய முடிவை எடுத்துள்ளோம். நாங்கள் அரச குடும்பத்தின் மூத்த உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகவுள்ளோம். சுதந்திரமாக வேலை செய்து, சுயமாகச் சம்பாதித்து வாழ ஆசைப்படுகிறோம்.

அதேநேரம் இங்கிலாந்து அரசுக்கும், ராணிக்கும் தேவையான எங்களது உதவிகள் தொடரும். கடந்த சில ஆண்டுகளாகவே இந்த வியத்தைச் செய்ய நாங்கள் தயாராக இருந்தோம். ஆனால், தற்போது நாங்கள் முடிவெடுத்துவிட்டோம்.

இங்கிலாந்து மற்றும் வட அமெரிக்காவில் எங்களின் நேரத்தை சமமாகச் செலவிடத் திட்டமிட்டுள்ளோம். இந்தப் புவியியல் சமநிலை எங்கள் மகனை, அவர் பிறந்த அரச பாரம்பரியத்தை பற்றிய புரிதலுடன் வளர்க்க உதவும்.

அதேநேரம் இந்த முடிவு எங்கள் குடும்பத்துக்கு அதிக கவனம் செலுத்துவதற்கான இடத்தையும் வழங்குகிறது. ராணி, கொமன்வெல்த் மற்றும் எங்கள் ஆதரவாளர்களுக்காக வேலை செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

நாங்கள் புதிய தொண்டு நிறுவனம் தொடங்கவுள்ளோம். எங்களின் இந்த அற்புதமான அடுத்த கட்டத்தின் முழு விவரங்களையும் சரியான நேரத்தில் பகிர்ந்துகொள்வோம்.

நாங்கள், இங்கிலாந்து ராணி, வேல்ஸ் இளவரசர், கேம்பிரிட்ஜ் டியூக் மற்றும் அனைத்துக் கட்சிகளுடனும் ஒத்துழைக்கிறோம். இதுவரை எங்களுக்கு ஆதரவு அளித்த அனைவருக்கும் எங்களின் நன்றிகள்.

– இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

இளவரச தம்பதியின் இந்தத் திடீர் அறிவிப்பு இங்கிலாந்து மக்களுக்கு மட்டும் இன்றி அரச குடும்பத்துக்கும் பெரும் அதிர்ச்சியளித்துள்ளது. ஏனெனில் அவர்கள் அரச குடும்பத்தை சேர்ந்த யாரிடமும் கலந்தாலோசிக்காமல் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து பக்கிங்காம் அரண்மனை வெளியிட்டுள்ள அறிக்கையில், இளவரசர் மற்றும் இளவரசியின் முடிவால் அரச குடும்பம் கவலை அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹரி – மேகன் தம்பதியின் இந்த முடிவு அவர்களுக்கும் அரச குடும்பத்துக்கும் இடையிலான மிகப்பெரிய பிளவாக பார்க்கப்படுகிறது. அவர்களின் இந்த முடிவு பல்வேறு கேள்விகளை எழுப்பி உள்ளது. அவர்களின் புதிய பங்கு என்னவாக இருக்கும்? அவர்கள் எங்கு வாழ்வார்கள்? அதற்கு யார் பணம் கொடுப்பார்கள்? இனி அரச குடும்பத்துடன் அவர்களுக்கு என்ன உறவு இருக்கும்? – இது போன்ற கேள்விகளுக்கு விடையில்லை.

இளவரசர் ஹரி, அமெரிக்க நடிகையான மேகனை காதலித்து திருமணம் செய்து கொண்டமையும், அந்த தம்பதிக்கு கடந்த ஆண்டு ஆண் குழந்தை பிறந்ததும் குறிப்பிடத்தக்கவை.

# ஈரான் விவகாரத்தில் டிரம்புக்கு எதிராக அமெ. பிரதிநிதிகள் சபையில் தீர்மானம்



ஈரான்மீது போர்தொடுக்கும் விவகாரத்தில் அதிபர் டிரம்புக்கு எதிரான தீர்மானம் அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், போர் தொடுக்கும் விவகாரத்தில் டிரம்பின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் தீர்மானம் அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஜனநாயக கட்சி கொண்டு வந்த தீர்மானம் பிரதிநிதிகள் சபையில் நிறைவேறியது. அதே நேரத்தில், செனட் சபையில், குடியரசு கட்சிக்கு பெரும்பான்மை உள்ளதால், அங்கு இந்தத் தீர்மானம் நிறைவேறுவது கடினம் என்றே தெரிகிறது.

# மெக்ஸிக்கோவில் எரிமலை தீப் பிழம்பைக் கக்குகின்றது



மெக்ஸிக்கோ நாட்டிலுள்ள மிகப்பெரிய எரிமலை வெடித்துச் சிதறி, 3 கிலோ மீற்றர் உயரத்துக்கு வானத்தை நோக்கி சாம்பல் உள்ளிட்டவை தூக்கி வீசப்பட்டு வருகின்றன.

ட்லாமாகாஸ் (TLAMACAS) பகுதியிலிருக்கும் அந்த எரிமலையின் பெயர் போபோகேட்பெடல் (Popocatepetl )ஆகும். 17 ஆயிரத்து 802 அடி உயரம் கொண்ட அந்த எரிமலை, மெக்ஸிக்கோவிலிருக்கும் எரிமலைகளில் இரண்டாவது மிகப்பெரிய எரிமலையாகும்.

அந்த எரிமலை நேற்று முன்தினம் காலை முதல் வெடித்துச் சிதறி வருகிறது. அதிலிருந்து வானத்தை நோக்கி 3 கிலோ மீற்றர் தூரத்துக்கு சாம்பல், நெருப்பு குழம்பு, பாறைகள் உள்ளிட்டவை வீசப்பட்டு வருகின்றன.

# பயங்கரவாதம்: அங்கும் இங்கும்!



உலகஅரங்கைத் தொடர்ந்து பரபரப்புக்கும் எதிர்வினைகளுக்கும் உள்ளாக்கி வரும் அமெரிக்க– ஈரானிய நிலைவரங்களில் இப்போது ஒட்டுமொத்த அமெரிக்கப் படையினரையும் பயங்கரவாதிகள் என ஈரானிய நாடாளுமன்றம் ஏகமனதாக பிரகடனம் செய்திருக்கிறது.

கடந்த 3 ஆந்திகதி அதிகாலை பக்தாத்தில் வைத்து அமெரிக்க உந்து கணைகளால் கொல்லபட்ட தமது கதாநாயக இராணுவ ஜெனரல் காசிம் சூலேமானியின் இழுப்பின் பின்ன்ணியில் இந்த பயங்கரவாதப் பிரகடனத்தை தெஹ்ரான் செய்துள்ளது.

'பயங்கரவாதம்', 'பயங்கரவாதிகள்' என்ற பதங்கள் இலங்கைத் தீவுக்கும் புதியவைல்ல. அவ்வாறான பதங்கள் எப்போதும் அறத்தின் வழியும் அழிவின் வழியும் மாறிமாறி பிரயோகிக்கப்பட்டே வருகின்றன.

அறத்தின் வழி நின்ற ஈழத் தமிழர்களுக்கு தம் மீதான அடக்குமுறைகள் அரச பயங்கரவாத அடையாளத்துக்குரியனவாக மாறின. இதற்கு மாறாக, கொழும்பு அதிகாரமையமும் தமது தரப்பில் தமிழர்களின் விடுதலை வேட்கையை பயங்கரவாதம் என அடையாளப்படுத்தியது.

ஏன் சிறிலங்காவின் பிரதமரான மஹிந்த ராஜபக்ஷ இப்போதும் கூட தனது புத்தாண்டு வாழத்துச் செய்தியில் முன்னர் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கு சிங்கள இளைஞர்கள் மத்தியில் புரண்டோடிய உற்சாகத்தைப்போலவே இப்போது அவர்கள் நாடு முழுவதும் பொது இடங்களில் உள்ள சுவர்களைச் சுத்தம் செய்து, அவற்றில் ஓவியங்களை வரைகின்றார்கள் என செய்தி சொன்னார். அதாவது அன்று விடுதலைப் புலிகளை



தோற்கடிக்கும் வரை சிங்கள இளையோரிடம் இருந்த உற்சாகத்தைப்போலவே இப்போதும் உற்சாகம் இருக்கிறதென அவர் கதை சொன்னார்

இலங்கைத்தீவின் நிரந்தரமான அமைதிக்கு எப்படி இவ்வாறான பயங்கரவாத அடையாளப்படுத்தல் உதவப்போவதில்லையோ அவ்வாறுதான் உலகின் அமைதிக்கும் அமெரிக்காவும் ஈரானும் மாறிமாறி கூறும் பயங்கரவாத குற்றச்சாட்டுகளும் உதவப்போவதில்லை.

இதேபோலவே கடந்த 3 ஆம் திகதி அதிகாலை ஈரானிய ஜெனரல் காசிம் சூலேமானியை காவு வாங்கியதன் ஊடாக அமெரிக்கா தனது மத்திய கிழக்கின் மூலோபாயத்துக்கு தனக்குத் தானே ஆப்பு வைத்து விட்டதோ என்ற ஒரு ஐயமும் உள்ளது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை துருக்கி, சிரியா, ஈராக், ஜோர்தான், குவைத், பாஹ்ரெயின், ஐக்கிய அமிரகம், சவுதி, கட்டார், ஆப்கானிஸ்தான் எனப் பல நாடுகளிலும் அதன் துருப்புகள் நிலைகொண்டுள்ளன.

இதில் குவைத், பாஹ்ரெயின், கட்டார் ஆகிய நாடுகளில் தலா பத்தாயிரத்துக்கு மேற்றபட்ட துருப்புகள் உள்ளன. குவைத்தில் மட்டும் பதின் மூவாயிரம் அமெரிக்கத் துருப்புகள் நிலைகொண்டுள்ளமையால் எதிர்வரும் நாள்களில் இந்த நாடுகளில் இருந்து வெளிப்படக்கூடிய அமெரிக்க சார்பு நிலை மீதான எதிர்வினைகள் முன்கியமானவையாக இருக்கும். ஈராக்கில் ஏற்கனவே அமெரிக்க சார்பு நிலை வீழ்ச்சி



கண்டு அங்கிருந்து உடனடியாகவே அமெரிக்கத் துருப்புகள் வெளியேற வேண்டுமென்ற நாடா ளுமன்றத் தீர்மானமும் வெளிப்பட்டுள்ளது.

உலக அரங்கின் பின்னணியில் இலங்கையின் உள்ளூர் களத்தில் 'ரேமினேற்றர்' கோட்டாபய ராஜபக்ஷ கொண்டுள்ள இராணுவ மோகமும் சரி அனைத்துலக அரங்கில் வெளிப் படக்கூடிய இராணுவ மோகமும் சரி அவை எங்கெல்லாம் ரசிக்கப்படுகின்றனவோ, எங்கெல்லாம் அவற்றுக்கு மக்கள் ஆதரவு இருப்பதாக காட்டிக்கொள்ளப்படுகின்றதோ அங்கெல்லாம் அமைதி அடிவாங்கவே செய்யும்.

ஆனால் இவ்வாறு ஈராக் கோரினால் ஈராக் மீது கடுமையான பொருளாதாரத் தடைகள் எடுக்கப்படுமென அமெரிக்கா எச்சரித்திருந்தாலும் ஈராக்கின் சதாம் உசேனின் ஆட்சியை அமெரிக்கா கவிழ்த்து 17 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன்முறையாக ஈராக்கில் அமெரிக்க இராணுவத்தின் இருப்பு குறித்த வினா முக்கியமான 'பு' வடிவத்திருப்பத்தை எடுத்திருப்பதை அவதானிக்கவேண்டும். அதாவது சதாம் உசேனின் ஆட்சியை வீழ்த்திய அமெரிக்கக் கதாநாயகர் இப்பொது ஈராக்குக்கும் வில்லனாக மாறிவிட்டார்.

உலக அரங்கின் பின்னணியில் இலங்கையின் உள்ளுர் களத்தில் 'ரேமினேற்றர்' கோட்டாபய ராஜபக்ஷ கொண்டுள்ள இராணுவ மோகமும் சரி அனைத்துலக அரங்கில் வெளிப்படக்கூடிய இராணுவ மோகமும் சரி அவை எங்கெல்லாம் ரசிக்கப்படுகின்றனவோ, எங்கெல்லாம் அவற்றுக்கு மக்கள் ஆதரவு இருப்பதாக காட்டிக்கொள்ளப்படுகின்றதோ அங்கெல்லாம் அமைதி அடிவாங்கவே செய்யும்.

சிறிலங்காவின் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ தன்னை ஒரு வித்தியாசமானவராகக் காட்டிக்கொள்கின்றமையை மறுக்கமுடியாது. கடந்த வாரம் வெள்ளிக்கிழமை கூட அவர் தனது அக்கிராசன உரைக்காக நாடாளுமன்றத்துக்கு சென்றபோது கூட வழமையாக அவ்வாறான உரைக்காக செல்லும் அரசதலைவர்களை பின்தொடரக்கூடிய சம்பிரதாயபூர்வ குதிரைப்படை, வாகனத்தொடரணி, உந்துருளி தொடரணி போன்ற பந்தாக்கள் எதுவுமே இல்லை.

இவ்வாறான பந்தா அற்ற நிலையொன்று அவர் அரச தலைவராக உருமாறிய நாளில் இருந்தே காட்டப்படுகிறது. ஆனால் மறுபுறத்தே அவரது நிர்வாக மட்டத்தில் படை முகங்களின் ஆதிக்கம் வலுப்பெற்றுவருகின்றன.

சிங்களத்தேசியத்தின் பாதுகாப்புக்கு முன்னுரிமை என்ற பழைய உச்சாடனங்களின் ஊடாக இந்த நிலைமை நீட்சிக்கு உள்ளாக்கப்படுகிறது. இதன் பக்கவிளைவாகத் தான் பேரினவாத சிந்தனை ஆதிக்கத் தேசியவாதமாகத் தலைதூக்க முனைகிறது. இதற்கு ஓர் உதாரணமாக சிங்களத்தில் மட்டுமே தேசிய கீதம் பாடப்பட வேண்டும் என்ற தீவிரமான பேசு பொருளை எடுக்கலாம்.

தனகுத் தெரியாத சிங்களம் தன்பிடரிக்கு சேதம் உருவாக்கியதைப் போல தமிழர்கள் தமக்குபுரியாதசிங்களத்தில்தான்இலங்கையைப் போற்றவேண்டும் என சிங்களத் தேசியவாதிகள் அடம்பிடிக்கின்றார்கள்

உலகில் உள்ள பலநாடுகளில் உதாரணமாக பெல்ஜியம்,புருண்டி,கனடா, கொமரோஸ், பிஜி, பின்லாந்து, கென்யா, மலாவி, மார்சல் தீவுகள், நவ்ரு – நியுசிலாந்து, தென்னாபிரிக்கா, சூரினாம், சுவிற்ஸர்லாந்து, சாம்பியா, சிம்பாவே போன்ற பல நாடுகளிலும் பலமொழிகளில் தேசிய கீதம் இசைக்கப்படும் முன்னுதாரணங்களை உள்ளன.

அவ்வாறாயின் இலங்கையில் மட்டும் ஏன் இரண்டுமொழிகளில் பாடமுடியாது? அதுவும் 1949இல் முதன்முதலில் தமிழில் பாடப்பட்டு அதன் பின்னர் 2015இல் இருந்து 2019வரை பாடப்பட்டநிலையில் ஏன் இந்தாண்டு அதனைப் பாடுவதா, இல்லையா என்பதில் பட்டிமன்றம் நடத்த வேண்டும்? பௌத்த துறவிகளும் கடும்போக்காளர்களும் இதில் ஏன் கடும்போக்கு காட்டவேண்டும்?

சரி. இப்போது தமிழர்கள் தமக்கு வாக்களிக்காமல் விட்டாலும் யானே அவர்களுக்கும் அரச தலைவர் என பிரகடனப்படுத்திய கோட்டாபய அல்லது அவ்வப்போது தமிழில் அதில் தப்புத்தண்டா இருந்தாலும் அந்த மொழியில் உரையாற்றப் பினனிற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ்ச் ஆகிய முகங்கள் இந்த விடயத்தில் தமிழர்களுக்கு என்ன செய்தியை வழுங்கப் போகின் றார்கள்? சுதந்திரதினம் வரும் பெப்ரவரி 4 இற்கு இன்னமும் 4 வாரங்கள் கூட இல்லையென்பதும் இங்கு முக்கியமானது.

நன்றி - ஐ.பி.ஸி.தமிழ்



# இலங்கைக் கடவுச்சீட்டுக்கு உலகளவில் 97ஆவது இடம்

சிறந்த கடவுச்சீட்டுக்களைக் கொண்டுள்ள 200 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் இலங்கை 97ஆவது இடத்தில் இருப்பதாக சுதந்திரமான பயணங்களுக்காகச் சர்வதேச குறியீடு தெரிவித்துள்ளது.

இலங்கை கடவுச்சீட்டு கடந்த ஆண்டு 96 ஆவது இடத்தில் இருந்தது. இந்தமுறை ஒரு படி குறைந்துள்ளது. எனினும், சிறந்த பயணத்தை கொண்டுள்ள நாடு என்ற ரீதியில் 10 வீதத்தை தக்கவைத்துள்ளது.

சிறந்த கடவுச்சீட்டை கொண்டுள்ள நாடு என்ற வகையில் ஜப்பான் முதலிடத்தில் உள்ளது. ஜப்பான் கடவுச்சீட்டைக் கொண்டுள்ளவர்கள் விசா இன்றியும் மற்றும் சென்று இறங்கிய பின் விசா அனுமதி வசதிகளை 191 நாடுகள் வழங்கியுள்ளன. இரண்டாவது இடத்தில் சிங்கப்பூர் உள்ளது. சிங்கப்பூர் கடவுச்சீட்டைக் கொண்டுள்ளவர்கள் 190 நாடுகளுக்கு விசா இன்றிச் செல்ல முடியும்.

தென் கொரியாவும் ஜேர்மனியும் மூன்றாவது இடத்தில் உள்ளன. இந்நாடுகளின் கடவுச்சீட்டைக் கொண்டுள்ளவர்கள் 189 நாடுகளுக்கு விசா இன்றிப் பயணிக்க முடியும்.

இத்தாலியும் பின்லாந்தும் 4ஆவது இடத்தில் உள்ளமையுடன் இந்நாடுகளின் கடவுச்சீட்டுக்களை கொண்டுள்ளவர்கள் 188 நாடுகளுக்கு விசா இன்றி பயணிக்க முடியும். 5ஆவது இடத்தில் ஸ்பெயின், லக்ஸ்சம்பேர்க், டென்மார்க் ஆகிய நாடுகள் உள்ளன. இந்நாடுகள் 187 நாடுகளுக்கு விசா இன்றி பயணிக்க முடியும். சுவீடன் மற்றும் பிரான்ஸ் நாடுகள் 6ஆவது இடத்தில் உள்ளமையுடன் இந்நாடுகள் 186 நாடுகளுக்கு விசா இன்றிப் பயணம் செய்ய முடியும்.

சுவிசர்லாந்து, போர்த்துக்கல், நெதர்லாந்து, அயர்லாந்து, ஒஸ்ரியா ஆகிய நாடுகள் 7ஆவது இடத்தில் உள்ளன. இந்த நாடுகள் 185 நாடுகளுக்கு விசா இன்றி பயணிக்க முடியும். அமெரிக்கா, பிரித்தானியா, நோர்வே, கிறீஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகள் 8வது இடத்தில் உள்ளன. இந்நாடுகளின் கடவுச்சீட்டைக் கொண்டுள்ளவர்கள் 184 நாடுகளுக்கு விசா இன்றி பயணிக்க முடியும்.

9ஆவது இடத்தில் நியூசிலாந்து, மால்டா, செக் குடியரசு, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் உள்ள. இந்நாடுகளின் கடவுச்சீட்டை கொண்டுள்ளவர்கள் 183 நாடுகளுக்கு விசா இன்றி பயணிக்க முடியும். 10வது இடத்தில் ஸ்லோவோக்கியா, லித்துவேனியா, ஹங்கேரி ஆகிய நாடுகள் உள்ளன. இந்நாடுகளின் கடவுச்சீட்டை கொண்டுள்ளவர்கள் 181 நாடுகளுக்கு விசா இன்றிப் பயணிக்க முடியும்.

ஏனைய ஆசிய நாடுகளில் மாலைதீவு வலுவான நாணயத்தை கொண்டுள்ளதுடன் அந்நாட்டு மக்கள் 85 நாடுகளுக்கு விசா இன்றிச் செல்ல முடியும்.

இந்தியா 84ஆவது இடத்திலும் வியட்நாம் 88ஆவது இடத்திலும் உள்ளன. எத்தியோப்பியா மற்றும் தென் சூடான் நாடுகள் இலங்கையுடன் கடந்தாண்டு இருந்த 96ஆவது இடத்தில் உள்ளன.

மிகவும் மோசமான கடவுச்சீட்டை கொண்டுள்ள நாடுகள் வரிசையில் முறையே வடகொரியா, சூடான், நேபாளம், பாலஸ்தீனம், லிபியா, ஏமன், சோமாலியா, பாகிஸ்தான், சிரியா, ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் உள்ளன. (ஐ)

# யாழ். மதத் தலைவர்களை சந்தித்து பேசினார் ஆளுநர்







யாழ்ப்பாணம், ஜன. 11

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், நல்லை ஆதீன குருமுதல்வர், யாழ்ப்பாணம் நாக விகாரை விகாராதிபதி மற்றும் இஸ்லாமிய மௌவி ஆகியோரைச் சந்தித்து ஆசிகளைப் பெற்றார்.

இந்தச் சந்திப்புகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றன.

வடக்கு மாகாணத்தின் நிலைமைகள் தொடர்பில் மதத் தலைவர்களிடம் கேட்டறிந்த ஆளுநர், தன்னால் முன்னெடுக்க எதிர்பார்த்திருக்கும் பணிகளை அவர்களுக்கு எடுத்துரைத்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் கடந்த 2ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயரை கடந்த புதன்கிழமை சந்தித்து ஆசி பெற்றிருந்தார்.

இந்த நிலையில் இந்து, பௌத்த மற்றும் இஸ்லாமிய மதத் தலைவர்களைச் சந்தித்து நேற்று முன்தினம் ஆசிகளைப் பெற்றுக்கொண்டார். (ஐ - 07)

# 19 ஐ அறிமுகப்படுத்தியவர்களே முறைகேடாக பயன்படுத்தினர்!

## கெஹலிய றம்புக்வெல குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 11

19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை அறிமுகம் செய்தவர்களே, அதனை பாரிய அளவில் முறைகேடாகப் பயன்படுத்தியுள்ளார்கள் என்று இராஜாங்க அமைச்சர் கெஹலிய றம்புக்வெல குற்றம்சாட்டியுள்ளார். இதன் மூலம் நாட்டைப் புதிய பாதையில் இட்டுச் செல்வதற்கான வாய்ப்பு கிடைக்கும் என்று அன்றைய ஆட்சியாளர்கள் தொடர்ந்து கூறி வந்த போதிலும் இதனை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும் மீறியிருக்கின்றனர்



எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

# வவுனியாவில் மட்டும் 826 பேருக்கு டெங்கு!

## கட்டுப்படுத்த விசேட செயற்றிட்டம்



யாழ்ப்பாணம், ஜன. 11

வவுனியாவில் டெங்கு நோய்த்தாக்கம் காரணமாக 826 நோயாளர்கள் இனங்காணப்பட்ட நிலையில் வவுனியா நகர் முழுவதும் விசேட டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா நகரசபைக்குட்பட்ட இரண்டாம் குருக்குத்தெரு, ரயில் நிலைய வீதி, குருமன்காடு, ஏ -9 வீதி போன்ற பகுதிகளில் டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரித்து காணப்படுகின்றன. அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் அந்தப் பகுதிகளில் மலேரியா தடுப்புப் பிரிவினரால் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை புகை மூலம் கட்டுப்படுத்தும் நடவடிக்கை நேற்றுக் காலை 8.00 மணி தொடக்கம் 9.30 மணி வரை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, தற்போது வவுனியாவில் டெங்கு நுளம்பின் தாக்கம் ஆரம்பத்தை விட குறைந்துள்ளதாகவும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைந்துள்ளதாகவும் பிராந்திய சுகாதார பணிமனையின் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தியாகலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ - 100)

# ரஷ்ய, சீன அமைச்சர்கள் ஒரே நேரம் இலங்கைக்கு!

கொழும்பு, ஜன. 11

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சீன விஜயம் திடீரென இரத்துச் செய்யப்பட்டுள்ள நிலையில், சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் 13ஆம், 14ஆம் திகதிகளில் இலங்கையில் தங்கியிருக்கும் அவர், இலங்கை வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் தினேஷ் குணவர்தனவை, சந்தித்துக் கலந்துரையாடுவார்.

இதே நாட்களில், ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்ஜி லவ்ரோப்பும் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரைச் சந்தித்து இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது பற்றி கலந்துரையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



காலைக்கதிர் Kalaikathir



# சிறிது காலம் ஓய்வில் இருக்க கெய்ல் திட்டம்

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரரான கிறிஸ் கெய்ல், சிறிது காலம் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வில் இருக்க தீர்மானித்துள்ளார்.

இதற்கமைய கிறிஸ் கெய்ல், எதிர்வரும் இந்தியா அணிக்கெதிரான தொடர், பிக் பேஷ், பி.பி.எல். ஆகிய தொடர்களில் தாம் விளையாட மாட்டார் என தெரிவித்துள்ளார்.

மேலும் இதுகுறித்து அவர் கூறுகையில், 'நான், இந்தியாவுக்கு எதிரான தொடரில் விளையாட வேண்டும் என மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சங்கம் என்னைக் கேட்டுக்கொண்டது. ஆனால் நான் விளையாடப் போவதில்லை.

"இளைஞர்களுடன் இணைந்து நான் விளையாட வேண்டும் என விரும்பப்பட்டார்கள். ஆனால், இந்த வருடம் நான் சிறிது ஓய்வு எடுத்துக்கொள்ளப் போகிறேன்.

"இந்தியா தொடர் மட்டுமல்லாமல் பிக் பேஷ், பி.பி.எல். போன்ற ரி – 20 தொடர் ஆகியவற்றிலும் விளையாட மாட்டேன்.

"உலகக் கிண்ண ரி – 20 தொடரில் நான் விளையாடினால் நன்றாக இருக்கும். ஒரு வாய்ப்பு எனக்காகக் காத்திருக்கிறது. என்ன நடக்கிறது என்று பார்க்கலாம்.

"திறமையான இளம் வீரர்களும் அணியில் உள்ளார்கள். தேர்வுக்குழுவினர் நான் விளையாடுவது குறித்து என்ன சொல்கிறார்கள் என்று பார்க்கலாம்"– என்று கூறினார்.

40 வயதான கிறிஸ் கெய்ல், இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக்கிண்ண தொடருடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

எனினும், அதன்பிறகு ஓய்வு அறிவிப்பினை ஒத்திவைத்த கிறிஸ் கெய்ல், தொடர்ந்தும் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி வருகிறார்.

ஆனால் அவருக்கு மேற்கிந்திய தீவுகள் அணியில் விளையாடுவதற்கு வாய்ப்பு கிடைக்காவிட்டாலும், வெளிநாட்டு ரி – 20 தொடர்களில் அதிகம் விளையாடி வருகிறார்.




கடந்த வருட இறுதியில் மேற்கிந்திய தீவுகள் அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்து தலா 3 போட்டிகள் கொண்ட ரி – 20, ஒரு நாள் தொடர்களில் பங்கேற்றது. இந்தத் தொடரில் கிறிஸ் கெயில் பங்கேற்கவில்லை.

இதற்கிடையில், தென்னாபிரிக்காவின் எம்.எஸ்.எல் ரி – 20 தொடரில் விளையாடிய கிறிஸ் கெய்ல், 6 இன்னிங்ஸில் 101 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார். இதனால் கெயில் கடும் விமர்சனத்திற்கு உள்ளானார்.

இந்த நிலையிலேயே கிறிஸ் கெய்ல், சிறிது காலம் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு எடுத்துவிட்டு பின்னர் வலுவான வீரராக உருவெடுத்து வரத் தீர்மானித்துள்ளார்.




# வோர்னின் தொப்பி படைத்த சாதனை

ஆஸ்திரேலியாவின் காட்டுத் தீக்கு நிதி திரட்ட ஷேன் வோர்ன் தனது தொப்பியை ஏலம் விட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் காட்டுத் தீக்கு பலரும் உதவி கரம் நீட்டி வருகின்றனர். இந்நிலையில், ஆஸ்திரேலியாவின் முன்னாள் வீரர் ஷேன் வோர்ன் தான டெஸ்ட் போட்டியில் விளையாடிய போது அணிந்திருந்த தொப்பியை ஏலம் விட்டுள்ளார்.

வோர்னின் தொப்பியை வாங்க ஒன்லைன் மூலம் பலரும் போட்டி போட்டுள்ளனர். இதனால், அவருடைய தொப்பி வரலாறு காணாத உச்ச விலைக்கு ஏலம் போய்யுள்ளது.

இறுதியில், 10 லட்சம் டொலர் அளவிற்கு அந்த தொப்பி ஏலம் போயுள்ளது.

கிரிக்கெட் வீரர் ஒருவர் பயன்படுத்திய பொருள் ஏலம் விடப்பட்டத்தில் அதிக விலைக்கு போனதில் இதுவே பெரிய சாதனையாகும்.

இதற்கு முன், ஆஸ்திரேலியா கிரிக்கெட் ஜாம்பவான் டொன் பிரட்மன் டெஸ்ட் போட்டியில் உபயோகப்படுத்திய தொப்பி இந்திய மதிப்பில் 3 கோடி ரூபாவுக்கு ஏலம் போனதே அதிகப்பட்ச சாதனையாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய தொடரிலும் மார்னஸ் சாதிப்பார்

ஆஸ்திரேலியா டெஸ்ட் கிரிக்கெட் அணியில் சிறந்த வீரராக உருவெடுத்துள்ள இளம் வீரர் மார்னஸ் லபுஸ்சேகன், எதிர்வரும் இந்திய தொடரிலும் சாதிப்பார் என அணியின் தலைவர் ஆரோன் பின்ஞ் தெரிவித்துள்ளார்.

கடந்த 2018ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமாகி, ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஏமாற்றத்துடன் வெளியேறிய மார்னஸ் லபுஸ்சேகனுக்கு கிரிக்கெட் எதிர்காலமே முடிந்து விட்டது என எண்ணிய தருணத்தில், கடந்த ஆண்டு ஆஸ் தொடரில், முன்னணி வீரர் ஸ்டீவ் ஸ்மித்திற்குப் பதில் வீரராகக் களமிறங்கித் தன்னாலும் முடியும் என சாதித்துக் காட்டினார் லபுஸ்சேகன்.

தனக்கு கிடைத்த வாய்ப்பைப் பற்றி பிடித்துக் கொண்ட லபுஸ்சேகன், அடுத்து வந்த அனைத்து டெஸ்ட் போட்டிகளிலும் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி பலரினதும் கவனத்தை ஈர்த்தார்.

தற்போது அவரது வருகையை இரசிகர்கள் ஒருநாள் கிரிக்கெட்டிலும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இதுவரை சர்வதேச ஒருநாள் போட்டியில் விளையாடாத லபுஸ்சேகன், எதிர்வரும் இந்தியா அணிக்கெதிரான ஒருநாள் தொடரில் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில் இதுகுறித்து அணியின் தலைவர் ஆரோன் பின்ஞ் கருத்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், இந்திய துணை கண்டத்தில் விளையாடும்போது, உங்களது திறமை, திட்டமிடல் மீதே உங்களுக்கு சந்தேகம் வந்து விடும். ஏனெனில் இந்திய வீரர்கள் வெகுவாக ஆதிக்கம் செலுத்தி அத்தகைய சந்தேகத்தை உங்களுக்கு கொண்டு வந்து விடுவார்கள். அது எங்களுக்கு தெரியும்.

எங்களது திறமை என்ன? இந்தியாவை வீழ்த்த என்ன செய்ய வேண்டும் என்பதில் தெளிவாக இருக்கிறோம். கடந்த ஆண்டு இந்தியாவில் நடந்த ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் முதல் 2 போட்டிகளில் தோற்று பிறகு அடுத்த 3 போட்டிகளில் வரிசையாக வெற்றி பெற்று தொடரை கைப்பற்றினோம். அது இந்தியச் சூழலில் சாதிப்பதற்கு எங்களுக்கு நிறைய நம்பிக்கையை அளிக்கிறது.

எங்களது வீரர் மார்னஸ் லபுஸ்சேகன் டெஸ்ட் கிரிக்கெட்டில் நம்ப முடியாத அளவுக்கு சிறப்பாக விளையாடி ஓட்டங்கள் குவித்தார். அவரது அத்தகைய போட்டி ஒரு நாள் கிரிக்கெட்டிலும் தொடரும் என்று நம்புகிறேன். உள்ளூரில் நடந்த மார்ஷ் கிண்ணம் ஒரு நாள் போட்டியில் அவர் சிறப்பாக விளையாடினார். 3 ஆவது வரிசையில் களம் இறங்கி சராசரியாக கிட்டத்தட்ட 40 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

குயின்ஸ்லாந்து அணிக்காக வேகம் குறைந்த ஆடுகளங்களில் சுழற்பந்து வீச்சை திறம்படச் சமாளித்தார். இது இந்திய தொடரிலும் அவருக்கு உதவிகரமாக இருக்கும். கிளென் மேக்ஸ்வெல், ஷோன் மார்ஷ், உஸ்மான் கவாஜா, நாதன் லியோன் போன்ற வீரர்கள் ஒரு நாள் போட்டி அணியில் இடம் பெறவில்லை. அதற்காக இனி அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்காது என்று அர்த்தமில்லை. அவர்களால் மீண்டும் அணிக்குத் திரும்ப முடியும் – எனக் கூறினார்.

25 வயதான மார்னஸ் லபுஸ்சேகன், இதுவரை 14 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 1459 ஓட்டங்களை குவித்துள்ளார். இதில் 8 அரைசதங்கள், 4 சதங்கள், ஒரு இரட்டை சதம் அடங்கும். மேலும், சராசரி 63.43 ஆகும். அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை 215 ஆகும்.

இந்தியா அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகின்றது. இதன் முதல் போட்டி, எதிர்வரும் 14ஆம் திகதி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# வெற்றியை ருசித்தது மேற்கிந்திய தீவுகள்!

அயர்லாந்து அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி 1 விக்கெட்டினால் திரில் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மேற்கிந்திய தீவுகள் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2–0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

பார்படோஸ் மைதானத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அயர்லாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.




இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 237 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, போல் ஸ்டெய்ர்லிங் 63 ஓட்டங்களையும், சிமி சிங் 34 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், அல்சாரி ஜோசப் 4 விக்கெட்டுகளையும், செல்டோன் கொட்ரெல் 3 விக்கெட்டுகளையும், கெரி பியர் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 234 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 49.5 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் மேற்கிந்தியத் தீவுகள் அணி 1 விக்கெட்டினால் திரில் வெற்றியைப் பதிவு செய்தது.

இதன்போது மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, நிக்கோலஸ் பூரான் 52 ஓட்டங்களையும், ஹெய்டன் வோல்ஷ் ஆட்டமிழக்காது 46 ஓட்டங்களையும், கிரன் பொலார்ட் 40 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

அயர்லாந்து அணியின் பந்துவீச்சில், சிமி சிங் 3 விக்கெட்டுகளையும், என்டி மெக்பிரைன் மற்றும் பெரி மெக்கார்தி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், போய்ட் ரென்கின் மற்றும் மார்க் அடாயர் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, மேற்கிந்திய தீவுகள் அணி சார்பில் 4 விக்கெட்டுகளைச் சாய்த்த அல்சாரி ஜோசப் தெரிவு செய்யப்பட்டார்.

மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின், மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி நாளை கிரெனடா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 தொடரில் விளையாடுவதற்காக மேற்கிந்திய தீவுகள் சென்றுள்ள அயர்லாந்து அணி, அடுத்ததாக ரி – 20 தொடரில் விளையாடுகின்றது.

இந்த ரி – 20 தொடரின் முதல் போட்டி, எதிர்வரும் 15ஆம் திகதி கிரெனடா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# 39 சாரதிகள் சிக்கினர்



வவுனியா, ஜன. 11

வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது 39 சாரதிகளுக்கு எதிராகத் தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் 03 சாரதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்குதல் செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் மாலை 2 மணி நேரம் இந்த விசேட சோதனை நடவடிக்கை இடம்பெற்றது.

வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி காமினி திஸாநாயக்க தலைமையில் வவுனியா ரயில் நிலைய வீதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது சுமார் இரு மணி நேரத்தில் மாத்திரம் மூன்று சாரதிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்குதல் செய்யப்பட்டுள்ளமையுடன், 39 சாரதிகளுக்கு எதிராக தண்டப்பணமும் விதிக்கப்பட்டது.

இந்தச் சோதனை நடவடிக்கையில் தலைக்கவசம் சீராக அணியாமை, சாரதி அனுமதிப்பத்திரம் இன்மை, அதிக சத்தம், முச்சக்கரவண்டிக்கு அதிகளவான அலங்காரம், தலைக்கவசத்தினுள் தொலைபேசி வைத்திருந்தமை போன்ற பல்வேறு குற்றங்களுக்காகவே சாரதிகளுக்குத் தண்டம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிரான்ஸ் தூதராக ஈவா வனசுந்தர

கொழும்பு, ஜன. 11

ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ஈவா வனசுந்தர பிரான்ஸுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோன்று பேராசிரியர் நளின் டி சில்வா மியான்மருக்கான இலங்கைத் தூதுவராகவும் ,ஏ.எல்.ஏ அஸீஸ் நோர்வேக்கான இலங்கைத் தூதுவராகவும், மல்ராஜ் டி சில்வா ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவராகவும் நியமனம் பெற்றுள்ளனர். (ஐ)

# தமிழ் மக்கள் பிரதிநிதிகளுக்கும் கோட்டாவுக்கும் இடையே விரிசல்

## கூறுகிறார் சிவசக்தி ஆனந்தன்



ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதிக்கும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் பெரும் அரசியல் இடைவெளி ஏற்பட்டுள்ளது என மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதிக்கும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் அரசியல் இடைவெளி ஒன்று ஏற்பட்டுள்ளது. அந்த வெற்றிடத்துக்கு நடந்து முடிந்த தேர்தலின்போது தமிழ் மக்கள் எடுத்துக்கொண்ட நிலைப்பாடே காரணம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாங்கள் கூறிய அந்த நிலைப்பாட்டுக்கு ஏற்பவே தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்தனர் என உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

புதிய ஜனாதிபதி 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இருக்கக் கூடிய மாகாண சபைக்குரிய அதிகாரங்களில் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது எனக் கூறியுள்ள நிலையில் தமிழ் மக்களது நீண்டகாலத் தேசிய பிரச்சினைகள், அரசியல் தீர்வு உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலை தொடர்கிறது.

ஜனாதிபதியின் நாடாளுமன்ற கொள்கை விளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றத்தில் இரண்டு நாள்கள் விவாதம் நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஜனாதிபதி ஒரு அரசியல்வாதி அல்லர், அவர் உண்மையைப் பேசுகிறார். ஆகவே அவருடன் இணைந்து நாங்கள் பணியாற்றத் தயாராக இருக்கின்றோம் என்று கூறியுள்ளார். உண்மையில் சம்பந்தன் மூத்த அரசியல்வாதி. நீண்ட காலமாக அரசியலில் இருக்கிறார். அரசியல்வாதி அல்லாத ஒருவர் உண்மையைப் பேசுகிறார். அவர் எல்லாவற்றையும் செய்வார் என கூறினால், சம்பந்தன் இவ்வளவு காலமும் அரசியல்வாதியாக இருப்பதால் தமிழ் மக்களுக்குப் பொய்யா கூறி வருகிறார் அவர் பொய் தான் கூறுகின்றார் என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஆகவே சம்பந்தனின் கூற்றுப்படி அரசியல்வாதி அல்லாத கோட்டாபயவுக்கு வாக்களித்த சிங்கள மக்கள் உண்மையானவர்களாகவும், அரசியல்வாதியான சஜித் பிரேமதாஸவை ஆதரித்த தமிழ் மக்கள் பொய்யர்கள் என்றும் கருத்துப்படத்தான் அவர் கூறியுள்ளார். ஆகவே, புதிய ஜனாதிபதியைத் தங்களுடைய பக்கம் வசியம் செய்வதற்காகச் சம்பந்தன் முன்னுக்குப் பின் முரணாக –இராஜதந்திரமற்ற வகையில் மேற்கொள்ளும் இந்தச் செயற்பாடனது ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது.

தொடர்ச்சியாக இவர்களது இராஜதந்திரமற்ற நடவடிக்கைதான் கடந்த 70 வருடமாக தமிழர்களை மிக நெருக்கடியான நிலைமைக்கு இட்டுச் சென்றுள்ளது. ஆகவே கூட்டமைப்பின் தலைவர், அவருடன் சார்ந்து இருப்பவர்கள், புத்திசாலித்தனமாகவும், இராஜதந்திரமாகவும் அனுகாது காலத்துக்குக் காலம் தங்களது சுயலாப அரசியல் இருப்பைத் தக்க வைக்க எடுக்கும் முயற்சிகளும் தமிழ் மக்களுக்குப் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளன. இதனால் புதிய ஜனாதிபதிக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் பெரும் அரசியல் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. இந்த அரசியல் வெற்றிடத்தை நிரப்புவதற்காக நாங்களும், விக்னேஸ்வரன் ஐயாவின் கட்சியும், சிறிகாந்தா மற்றும் சிவாஜிலிங்கத்தின் கட்சியும், அனந்தி சசிதரன் ஆகியோரும் இணைந்து தைப்பொங்கல் தினத்தன்று அல்லது அதற்கு அண்மித்தாக புதிய கூட்டணியை உருவாக்கவுள்ளோம். புதிய அரசியல் தலைமையானது தமிழ் மக்களுக்கு நீண்ட காலமாக இருக்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கும். ஆகவே 70 வருடமாக இராஜதந்திரமற்ற – தோற்றுப்போன கட்சிக்குப் பின்னால் நிற்காது, தெற்கில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவற்றுக்கு மாறி மாறி சிங்கள மக்கள் சந்தர்ப்பம் வழங்குகிறார்கள். தென்னிந்தியாவில் தி.மு.க, அ.தி.மு.க. என்பன மாறி மாறி ஆட்சிக்கு வருகின்றன. இதேபோல் தமிழ் மக்கள் மத்தியிலும் இரண்டு பலமான கட்சிகள் இருக்கவேண்டும். எனவே மக்கள் இதனை உணர்ந்து எமது மாற்று அணிக்குப் பலம் சேர்க்கவேண்டும். மக்களது ஆதரவுடன் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசுடனும், சர்வதேச சமூகத்துடனும் நாங்கள் பேசவுள்ளோம் – என்றார். (ஐ – 100)





Joy Makers குழுவினரின் ஆடை வங்கி திட்டத்தின் இரண்டாவது நிகழ்வானது கடந்த 30ஆம் திகதி ஒட்டிசுட்டான் சின்னச்சாலம்பனில் இடம்பெற்றது. ஆடை வங்கியின் இலவசக் கடையில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் தங்களுக்கான ஆடைகளை இலவசமாக கொள்வனவு செய்து கொண்டனர்.

இந்நிகழ்வில் சின்னச்சாலம்பன் பிரிவு கிராம சேவகர் மற்றும் எமது அமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆடைவங்கி திட்டத்திற்கு இதுவரை தங்களது உதவிகளை நல்கிய நல்லுள்ளங்களுக்கு நன்றிகளைத் தெரிவிப்பதோடு எதிர்வரும் நாள்களில் நாடு முழுவதும் நடைபெறவுள்ள ஆடைவங்கி திட்டத்தில் அனைவரையும் இணையுமாறு Joy Makers குழுவினர் அழைக்கின்றனர்.



# தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை 46 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நேற்று









யாழ்ப்பாணம், ஜன. 11

தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் 46 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னாள் முற்றவெளி மைதானத்தில் அமைந்துள்ள தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவுத் தூபியில் இந்த நினைவேந்தல் நடத்தப்பட்டது.

இதன்போது படுகொலை செய்யப்பட்ட 9 பேருக்குமாகப் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு நினைவுத் தூபிகளுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ். மாநகர முதல்வர் இமானுவேல் ஆர்னல்ட் உட்பட அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)



காலைக்கதிர் Kalaikathir



# அமெ. இராஜதந்திரி இலங்கை வருகிறார்



கொழும்பு, ஜன. 11

தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் முக்கிய அதிகாரியான ஆலிஸ் ஜி வெல்ஸ் அடுத்த வாரம் இரு தரப்பு சந்திப்புகளுக்காக இலங்கை மற்றும் இந்தியாவுக்கு வரவுள்ளார்.

அவர் தனது தெற்காசியப் பயணத்தை இலங்கையிலிருந்து தொடங்க உள்ளார். அவர் நாளை மறுதினம் கொழும்பில் இருப்பார்.

தனது சந்திப்புகளின்போது, மூத்த அரச அதிகாரிகள் மற்றும் சிவில் சமூகத்தின் உறுப்பினர்களைச் சந்தித்து, இரு தரப்பு மற்றும் பிராந்திய பிரச்சினைகள் குறித்து விவாதிப்பார்.

இதில் சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ – பசிபிக் பிராந்தியத்தில் பகிரப்பட்ட நலன்கள், வளர்ச்சி, ஜனநாயகம், நீதி மற்றும் மனித உரிமைகள் விவகாரங்கள் குறித்துப் பேசப்படும்.

இலங்கைப் பயணத்தின் பின்னர், வெல்ஸ் ஜனவரி 15 – 18 ஆம் திகதிகளில் இந்தியாவில் தங்கியிருப்பார். பின்னர், ஜனவரி 19 – 22 ஆம் திகதிகளில் அவர் இஸ்லாமாபாத் செல்வார். (ஐ)

# வவுனியா வைத்தியசாலையில் இலவச ஆடைகள் வங்கி திறப்பு



வவுனியா, ஜன. 11

வவுனியா வைத்தியசாலை விடுதியில் தங்கியுள்ள நோயாளர்கள் மற்றும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களின் ஆடைத்தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கோடு இலவச ஆடை வங்கியொன்று வவுனியா பொது வைத்தியசாலையில் நேற்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பூந்தோட்டம் சிரேஷ்ட பிரஜைகள் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சி.சு.கோணேஸ்வரலிங்கத்தின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த வங்கியில் புதிய ஆடைகள் மற்றும் தம்வசம் உள்ள பாவனைக்கு மேலதிகமான நல்ல நிலையில் உள்ள ஆடைகளையும் பொது மக்கள் வைப்பு செய்து நோயாளர்கள் மற்றும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டோருக்கு உதவ முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வைத்தியசாலைப் பணிப்பாளர் நந்தகுமார், உதவி பிரதேச செயலாளர் ச.பிரியதர்சினி, தாதி உத்தியோகத்தர்கள், சிரேஷ்ட பிரஜைகள் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)



# வங்கி முகாமையாளரின் தங்கச்சங்கிலி அபகரிப்பு

முல்லைத்தீவு, ஜன. 11

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் மக்கள் வங்கிக் கிளையின் முகாமையாளரின் தங்கச் சங்கிலி அறுத்து செல்லப்பட்டுள்ளது.

இதன்போது அவருடைய கழுத்துப் பகுதியில் கடுமையான காயங்கள் ஏற்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் முல்லைத்தீவு – மாங்குளம் வீதியில் முல்லைத்தீவு தொழில்நுட்பக் கல்லூரியை அடுத்துள்ள வெளியான பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஆள் நடமாட்டம் இல்லாததைப் பயன்படுத்தி மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் இந்தச் செயலில் ஈடுபட்டுள்ளனர்.

மாங்குளம் – முல்லைத்தீவு வீதியில் தனியாகச் செல்லும் பெண்களைக் குறிவைத்து இவ்வாறான வழிப்பறிகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# சிங்கள, பௌத்த இராச்சியத்தை அமைக்கும் நோக்கம் கிடையாது

## கூறுகிறார் டலஸ் அழகப்பெரும

கொழும்பு, ஜன. 11

சிங்கள, பௌத்த இராச்சியத்தை ஸ்தாபிப்பது எமது நோக்கமல்ல என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று முன் தினம் புதன் கிழமை இடம்பெற்ற பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், ‘தமிழ் – முஸ்லிம் மக்களைப் புறக்கணித்து தனி பௌத்த இராச்சியத்தைத் தோற்றுவிக்கும் விதத்தில் தேர்தல் சட்டத்தைத் திருத்தியமைக்க அரசு முயற்சிப்பதாக எதிர்த்தரப்பினர் மாறுப்பட்ட கருத்துக்களை குறிப்பிட்டுக் கொள்கின்றார்கள்.

எந்த இன மக்களையும் ஓரங்கட்டிச் செயற்பட வேண்டும் என்பது ஜனாதிபதியின் நோக்கமல்ல – என்றார். (ஐ)

# அரசு சொல்வதொன்று செய்வதோ வேறொன்று

## சாடுகின்றார் அநுரகுமார



கொழும்பு, ஜன. 11

தற்போதைய அரசு சொல்வதொன்று செய்வதொன்றாக உள்ளது என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தேர்தல் காலத்தில் தங்களின் வெற்றியை உறுதிசெய்து கொள்வதற்காகப் பொதுஜன பெரமுன மக்களுக்குப் பொய்யான வாக்குறுதிகளையே வழங்கியது.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் 2017இல் செய்யப்பட்ட சோபா ஒப்பந்தத்தில், அமெரிக்க அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் செய்யும்போது இலங்கை சட்டங்களுக்கு அவர்கள் கீழ்ப்படிய தேவையில்லை என்ற ஏற்பாடு காணப்படுகிறது.

அதாவது இலங்கைக்கு விஜயம் செய்யும் அமெரிக்க அதிகாரிகளை இலங்கையின் எந்தச் சட்டத்தின் மூலமும் தண்டனைக்கு உட்படுத்த முடியாது.

இலங்கையின் மோட்டார் வாகனச்சட்டத்திட்டத்துக்கும் அவர்கள் கீழ்ப்படிய தேவையில்லை. வீதி விபத்தொன்று ஏற்படும் பட்சத்தில் அதற்கான தண்டனைகள் அவர்களுக்கு வழங்கப்படாது.

இவ்வாறான ஒப்பந்தமே சோபா ஒப்பந்தம், ஒரு நாட்டுக்குள் பிரவேசிக்கும்போது அந்த நாட்டுக்கான சட்டங்களுக்கு இணங்க வேண்டியது அனைவரினதும் கடமை.

அதனை இல்லாதொழிக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மேற்கொள்ளப்படவிருந்தது. எம்.சி.சி ஒப்பந்தம் மூலம் நாட்டிற்கு நன்மைகள் கிடைக்குமென்று குறிப்பிட்டே அந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட தீர்மானிக்கப்பட்டாலும், 48 கோடி அமெரிக்க டொலர் கடனற்ற நிதி வழங்கப்படுவது பற்றி சிந்திக்க வேண்டும்.

ஆனால் தற்போதைய அரசு அது தொடர்பாக கவனம் செலுத்துகின்ற போதிலும் அதனைச் சரியென 70 சதவீனமோர் குறிப்பிடும் அதே வேளை நாட்டுக்கு தீங்கானது என 30 வீதமானவர்கள் தெரிவிக்கின்றனர் – என்றார். (ஐ)

# மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது!

முல்லைத்தீவு, ஜன. 11

முல்லைத்தீவு – முள்ளியவளை கயட்டைக்காட்டுப் பகுதியில் சட்டவிரோத மண்ணகழ்வில் ஈடுபட்ட இருவர் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சட்டவிரோத செயற்பாட்டை, வனவளத்திணைக்களத்தினர் தலையீடு செய்து தடுத்து நிறுத்தியுள்ளமையுடன் அதற்குப் பயன்படுத்தப்பட்ட இயந்திரமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

வனவளத் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்ட முள்ளியவளை கயட்டைக்காட்டுப் பகுதியில், வனவளத்திணைக்களத்தின் அனுமதியுடன் கரைதுறைப்பற்று பிரதேச சபையினர் கழிவுப் பொருள்களைக் கொட்டி வந்துள்ளனர்.

இவ்வாறு கொட்டப்பட்டுள்ள கழிவுப்பொருள்களைப் புதைப்பதற்காக கரைதுறைப்பற்று பிரதேசசபைத் தவிசாளரின் ஒப்புதலுடன் சபைக்கு அறிவிக்கப்படாமல் குப்பைக்குழி ஒன்றை வெட்டுவதற்கும் அந்த மண்ணை எடுத்துச்செல்வதற்கும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது அகழ்தெடுக்கப்படும் மண் மரநடுகைத் திட்டத்திற்கு பயன்படுத்துவதற்காகவே அகழ்ந்து செல்லப்பட்டதாக கூறப்பட்டபோதிலும் பெருமளவு மண் வேறு இடத்திற்கு எடுத்துச்செல்லப்படுவதாக குற்றஞ்சாட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)


வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்

இல.10, மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.01.2020 இல் வெளியிடப்பெற்றது.